## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 4-ம் பிரிவு 3-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி 'நவஜீவன்' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய சரித்திரம் பின் வருமாறு:—

அந்த அவமதிப்பை என்னல் பொறுக்க முடியாமல் துடித்தேன். ஆயினும் அதற்குமுன் பல தடவைகளில் நான் இம்மாதிரி அவமதிப்பைப் பொறுத்துக் கொண்டிருப்பதால் எனக்கு அது பழக்கமாகிவிட்டது. ஆகவே இதையும் மறந்து விட்டு நிஷ்பக்ஷபாதமான வழியில் யோசித்து நடப்பதென்று தீர்மானித்தேன்.

நான் மிஸ்டர் சேம்பர்லேனை டர்பனில் முதலிலேயே சந்தித்து விட்டதால் அவரிடம் செல்லும் தூதப் பிரதிநிதிகளிலிருந்து என்னை நீக்கி விடுவது அவசியமாயிருப்பதாக ஆசியாக்காரர் இலாகாவின் முக்கிய உத்தியோகஸ்தரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

என்னுடைய ஸகாக்கள் எவ்வளவு தூரம் பொறுமைகாட்ட முடியுமோ அதையும் இந்தக் கடிதம் மீறிவிட்டது. தூது அனுப்பும் யோசனையை அடியோடு விட்டுவிட அவர்கள் உத்தேசித்தனர் இதனல் இந்தியர்களின் நிலைமை கேவலமானதாகிவிடுமென்று அவர்களுக்கு எடுத்துக் காட்டினேன்.

"நீங்கள் மிஸ்டர் சேம்பர்லேன் முன் உங்கள் கட்சியை எடுத்துக் கூறுவிட்டால் உங்கள் பக்கத்தில் ஆதாரமே இல்லையென்று கருதப்பட்டு விடும். நமது கட்சியை எழுத்து மூலமாகவே கூறப் போகிறோம். அதையும் நாம் தயார் செய்துவைத்து விட்டோம். நான் வாசித்தாலும் அல்லது வேறு யாராவது அதை வாசித்தாலும் ஒன்றும் வித்தியாசமில்லை. மிஸ்டர் சேம்பர்லேன் நம்மோடு இதைப்பற்றி விவாதிக்கப் போவதில்லை. நாம் இந்த அவமதிப்பைப் பொருட்படுத்தக்கூடாது" என்று நான் கூறினேன்.

நான் பேசி முடிவதற்குள்ளாக டயாப்ஜேத் ருஸ்தம்ஜி கூறியதாவது:— "உங்களை அவமதிப்பது நமது வகுப்பையே அவமதிப்பதாகவில்லையா? நீங்கள் எங்களுடைய பிரதிநிதி என்பதை நாங்கள் எவ்வாறு மறக்க முடியும்?"

"வாஸ்தவம் தான். ஆனல் நமது வகுப்பு பூராவும் கூட இம்மாதிரி அவமதிப்புகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டியது தான். நமக்கு வேறு என்ன வழியிருக்கிறது?" என்று நான் கேட்டேன்.

"என்ன நேர்ந்தாலும் சரி. நாம் மீண்டும் ஒரு தடவை எதற்காக அவமதிக்க இடமுண்டு பண்ண வேண்டும்? இப்போதைவிட இன்னும் கேவலமாக எதுவும் நமக்கு நேர்ந்து விடமுடியாது. இழப்பதற்கு நமக்கு ஏதாவது இன்னும் உரிமைகளிருக்கின்றனவா என்ன?" என்று டயாப் ஜேத் கேட்டார்.

அவருடைய தைரியமான பதிலை நான் மெச்சினேன். ஆயினும் தைரியத்தால் பிரயோஜனமொன்று மேற்படாதென்பதும் எனக்குத் தெரியும். இந்தியர்களுடைய நிலைமையை நான் பூராவாக அறிந்திருந்தேன். ஆகவே என்னுடைய நண்பர்களைச் சமாதானப்படுத்தி, என்னுடைய ஸ்தானத்தில் இந்திய பாரிஸ்டர் ஸ்ரீமான் ஜார்ஜ் காட்பிரேயைச் சேர்த்துக்கொள்ளும்படி கூறினேன்.

கடைசியாக ஸ்ரீமான் காட்பிரே தூதின் தலைவராகச் சென்றார். மிஸ்டர் சேம்பர்லேன் பதில் கூறுகையில் என்னைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். "ஒரே பிரதிநிதி திருப்பித்திருப்பிக் கூறுவதைக் கேட்பதைவிட யாராவது புதிதாக ஒருவர் கூறுவதைக் கேட்பது விசேஷமல்லவா?" என்று அவர் கூறிப் புண்ணை ஆற்ற முயன்றார்.

ஆனல் இதெல்லாம் விஷயத்தை முடிப்பதற்குப் பதிலாக இந்திய வகுப்பின் வேலையையும் என்னுடைய வேலையையும் அதிகப்படுத்திற்று. நாங்கள் புதிதாக அடியிலிருந்து ஆரம்பிக்கவேண்டியிருந்தது.

"உங்களுடைய யோசனையின் பேரில் தான் இந்தியர்கள் யுத்தத்தின்போது உதவி செய்தனர். அதன்பலனை இப்போது பார்த்தீர்களா?" என்று சிலர் என்னைப் பரிகசித்தனர். ஆனல் இது என்னிடம் பிரயோஜனப்படவில்லை.

"நான் அப்போது கூறிய யோசனைக்காக வருந்தவில்லை. யுத்தத்தின்போது உதவி செய்தது சரியானதென்றே இன்னும் நினைக்கிறேன். அப்போது நாம் நமது கடமையையே செய்தோம். நாம் செய்த வேலைக்குப் பிரதிப்பலனை நாம் எதிர்பார்க்க முடியாமலிருக்கலாம். ஆனல் காலக்கிரமத்தில் நற்செய்கை பலனளிக்குமென்பதே என்னுடைய திடமான அபிப்பிராயம். கடந்து போனதை மறந்துவிட்டு முன்னே உள்ளவேலையைப்பற்றி யோசிப்போம்" என்று நான் கூறியதும் எல்லோரும் இசைந்தனர். நான் பின்னும் கூறியதாவது:— "உண்மையைச் சொல்லுமிடத்து நீங்கள் என்னை எதை உத்தேசித்து அழைத்தீர்களோ அவ்வேலை அநேகமாக முடிந்துவிட்டது. ஆனல் நீங்கள் எனக்கு ஊருக்குப்போக அனுமதிகொடுத்தால் கூட சாத்தியமான வரையில் நான் டிரான்ஸ்வாலைவிட்டுச் செல்ல மாட்டேன். முன்னைப்போல் நேட்டாலிலிருந்து வேலை செய்வதற்குப் பதிலாக இங்கிருந்து வேலை செய்ய வேண்டும். இன்னும் ஒரு வருஷ காலத்திற்கு நான் இந்தியாவிற்குத் திரும்புவதைப் பற்றியே நினைக்கக் கூடாது. டிரான்ஸ்வால் சுப்ரீம் கோர்ட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும். இந்தப் புதிய இலாகாவை எதிர்த்துச் சமாளித்துக் கொள்ள முடியுமென்று எனக்குப் போதுமான நம்பிக்கையிருக்கிறது. நாம் அப்படிச் செய்யாவிட்டால் இந்தியர்களிடம் உள்ளவற்றையெல்லாம் பூராவாகக் கொள்ளையடித்துக் கொண்டு அவர்களை இந்த தேசத்தையே விட்டுத் துரத்திவிடுவார்கள். ஒவ்வொரு நாளும் அவ்வகுப்பு புதிதுபுதிதாக அவமதிக்கப்பட்டுவரும். மிஸ்டர் சேம்பர்லேன் என்னைச் சந்திக்க மறுத்ததும், உத்தியோகஸ்தர் என்னை அவமதித்ததும் நம் வகுப்பு பூராவும் அவமதிக்கப்படுவதுடன் ஒப்பிடப்படும்போது மிகவும் அற்ப விஷயங்களாகிவிடும். நாம் நாய்களைப்போல வாழ வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறபடி நடப்பது பூராவும் அசாத்தியமாகும்."

யாம் இம்மாதிரி பேசி வேலையை ஆரம்பித்து, பிரிட்டோரியாவிலும் ஜொகான்ஸ் பர்க்கிலும் உள்ள இந்தியர்களைக் கலந்து யோசித்துவிட்டு ஜொகன்ஸ்பர்க்கில் காரியாலயத்தை ஸ்தாபிக்க முடிவு செய்தேன்.

டிரான்ஸ்வால் சுப்ரீம் கோர்ட்டில் என்னைப் பதிவு செய்துகொள்ளுவார்களா வென்பது சந்தேகமாயிருந்தது. ஆனல் வக்கீல் சங்கம் என்னுடைய மனுவை எதிர்க்கவில்லை. கோர்ட்டும் அதை அநுமதித்துவிட்டது. தகுந்த விடத்தில் இந்தியருக்குக் காரியாலயம் வைக்க இடம் கிடைப்பது மிகவும் கஷ்டமாகவிருந்தது. ஆனல் அப்போது அங்கு வியாபாரிகளில் ஒருவராகவிருந்த மிஸ்டர் ரிட்சுடன் நான் நெருங்கிப் பழகியிருந்தேன் அவருக்குத் தெரிந்த ஒரு வாடகை ஏஜண்டின் உதவியால் நகரத்தில் வக்கீல்கள் வசிக்கும் பாகத்தில் எனக்கு ஒரு நல்ல இடம் கிடைத்தது. உடனே நான் என் தொழிலை அப்பியசிக்க ஆரம்பித்தேன்.

---

**அடிமைப் புத்தியை ஒழியுங்கள்.**

**மனே விடுதலை அடையுங்கள்.**

**தேசத்தை விடுதலை செய்யுங்கள்.**

## கோயிற் பிரவேசம்.

திரிச்சி வக்கீல் ஸ்ரீமான் ஆர். நாராயண ஐயங்கார் எழுதுகிறார்:—

தாழ்ந்த வகுப்பினரைக் கோயில்களுக்குள் செல்லவிடவேண்டும் என்கிற இயக்கம் நம் தமிழ்நாட்டில் தோன்றியிருக்கிறது. இவ்வியக்கம் உண்மையான தெய்வீக இயக்கமாயின் அதைச்சரியான சத்தியாக்கிரக வழியில் நடத்திவைக்க வேண்டியது நமது நாட்டாரின் முக்கியமாக, நமது பத்திரிகைகளின் கடமை. இவ் விஷயத்தில் நமது பத்திரிகைகள் மௌனம் சாதிப்பது பத்திரிகைகளுக்குள்ள கடமையை அப்பத்திரிகைகள் செய்யத் தவறிவிட்டனவென்று தாழ்மையுடன் சொல்லவேண்டி வருகிறது.

தற்காலம் இவ் வியக்கத்தை நடத்துபவர் ஸ்ரீமான் ஜே. என். ராமநாதன் என்பவர் அவருடைய ராஜீய சரித்திரம் தமிழ்நாட்டாருக்கு நலகு தெரியும். பற்பல துறைகளில் அலைந்துவிட்டு மறுபடியும் 'ஜஸ்டிஸ்கட்சி'ப் பிரசாரகர்களுக்குள் ஒருவராய் விளங்குகிறார்.

கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்று நம்புவர்கள் யாவரும் கோயில்களுக்குள் பிரவேசிக்கலாம் என்பது என் அபிப்பிராயம். கோயிற் பிரவேச இயக்கத்தில் ஈடுபடுகிறவர்கள் யாவரும் இவ்வியக்கத்திற்கு எதிரிகள் யார் என்பதை சரிவர உணரவேண்டும். பஞ்சமர்கள் நமது கோயில்களுக்குச் செல்லக் கூடாது என்று பரம்பரையாய் கோயிற் பூஜைசெய்யும் குருக்கள் மார்களும், ஆங்கிலங்கற்று கோயிற் பிரவேசம் நியாயந்தான் என்று அறிந்தும் அதைப்பின் பற்றத் தைரியமில்லாமல் பழைய வழக்கங்களைக் கண் மூடித் தனமாய்ப் பின்பற்றுபவர்களும் தான் சொல்லுகிறார்கள். இதில் பின்னல் கூறப்பட்டவர்களின் எதிர்ப்பை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. குருக்கள் மார்களைப் பற்றின மட்டில் அவர்களிடம் நாம் அநுதாபப் படவேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ முன்னேர்கள் செய்து வந்தது சிலாக்கியம் என்று அவர்கள் நம்புகிறார்கள். நாம் சாந்தத்துடன் நமது பிரசாரத்தை நடத்தினல், இவர்களை நம்முடன் சேரும்படி செய்துவிடலாம்.

அடிப்படையான கொள்கைகளைச் சரிவர உணராமல் தற்காலம் இவ் வியக்கத்தை நடத்துபவர்கள் துவேஷத்தைக் கிளப்பிவருகிறார்கள். உதாரணமாகத் திருச்சியில் ஒரு பிரசங்கத்தில் பிராமணர்களைப் "பார்ப்பனப் பறையர்கள்" என்று ஒருவர் சொன்னர். இதிலிருந்து பறையர்களிடம் இவர்கள் என்ன மரியாதை வைத்திருக்கிறார்கள் என்று புலனாகிறது. சுவாமிக்கு மாமிசத்தை வைத்துப் பூஜை செய்தால் என்னவென்று கேட்டார் ஒரு தலைவர். அதே தலைவர் நாரதர் வண்ணாத்திக்குப் பிறந்தவர் என்றார். இவ்வாறு கட்டுக்கடங்காமல் அர்த்தமில்லாமல் பேசக் கூடியவர்களுக்கு இவ்வியக்கத்தை நடத்த யோக்கியதை இல்லை.

இவ்வியக்கம்வெற்றியடைய வேண்டுமானல் என்னசெய்யவேண்டும் என்று யோசிக்கலாம்.

1. முதலில் இவ்வியக்கத்துக்குத் தலைமையாயிருப்பவர்கள் எல்லாக் கட்சியினரின் மதிப்பையும் பெற்றவர்களாயிருக்க வேண்டும்.

2. இவ்வியக்கத்தை ஆரம்பிக்குமுன் பத்திராதிபர் ஆதரவைச் சம்பாதித்துப் பத்திரிகை வாயிலாகவும், துண்டுப் பிரசுர மூலமாகவும் பிரசாரம் நடத்த வேண்டும்.

3. கோயில்களை நடத்தும் தேவஸ்தானங்களுக்கும் அதிகாரிகளுக்கும் நம் இயக்கத்தைப் பற்றி நாம் எம்மாதிரி எப்பொழுது எந்தக் கோயில்களுக்கு வரப்போகிறோம் என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

4. ஆரம்பிப்பதற்கு முன்னல் சாஸ்திரம் படித்து அறிந்தவர்களையும் ஜனங்களிடத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களையும் வரவழைத்து மகாநாடு ஒன்று நடத்தவேண்டும்.

5. கோயிற் பிரவேசம் செய்யும்பொழுது தடை ஏற்பட்டால் சத்யாக்ரஹம் செய்ய அஹிம்ஸா தர்மத்தை மேற்கொண்ட சத்யாக்ரஹிகள் வேண்டும்.

6. இவ்வியக்கத்தில் ஈடுபட்டவர்கள் துவேஷம், கோபம் இவைபோன்ற கெட்டகுணங்கள் இல்லாமல் எக்கஷ்டத்தையும் அனுபவிக்கும் திடமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

7. சத்தியாக்ரஹம் செய்வது கூரிய வாளின் மேல் நடப்பது போல் கடினம் என்ற காந்தி வாக்கை உணர்ந்தவர்களாயிருக்கவேண்டும்.

மேலே குறிப்பிட்ட அம்சங்களை உணராதவர்களும், அனுஷ்டிக்கத் தயாராயில்லாதவர்களும் இக்காரியத்தில் தலையிட்டால் இவ்வியக்கம் தலை தூக்காது என்பது திண்ணம். தெய்வீகத் தன்மையை அடையவேண்டுமென்று இச்சைப் படுபவர்கள் முன் வருவார்களா? நமது பத்திரிகைகள் சரியான சத்யாக்ரஹத்தை ஜனங்களுக்கு உணர்த்துமா?

---

### ("லோகோபகாரி" எழுதுவதாவது)

சென்ற சில காலமாகத் தாழ்ந்த வகுப்பார் கோயிற் பிரவேசக் கிளர்ச்சி சில இடங்களில் தோன்றியிருக்கிறது. இந்தக் கிளர்ச்சியில் ஒரு சார்பாருக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்த போதிலும், நாட்டிலே பெரும்பாலோருக்கு இதில் அநுதாபம் இருக்கிறதென்றே நாம் நம்புகிறோம். ஆயினும், இந்த இயக்கத்தைச் செம்மையாக வகுத்து ஒரு நெறியிலே நடக்குமாறு துணை புரிய வேண்டியது நாட்டிலுள்ள பெரியோர்களின் கடமையாகும். இவ்விஷயத்தில் அலட்சியமாகவோ, அநுதாபக் குறைவாகவோ இருத்தல் தவறு. கோயிற் பிரவேச விஷயத்தில் ஊக்கங்காட்டும் பிராமணரல்லாதார் சிலர் பிராமணத் துவேஷத்துடன் இவ்வியக்கத்தை நடத்தியும், பிராமணர் இதனை வெறுப்புடன் நோக்கியும் வந்தால், இந்த இயக்கம் விபரீதமாகவே முடியும். வழக்கம், மாமூல் என்ற காரணங்களைக் காட்டி அந்த வார்த்தைகளில் அடைக்கலம் புகுந்து இந்த இயக்கத்தை ஒரு சார்பார் விரோதமாகக் கருதுவதில் பயனில்லை. அவர்கள் இதனை அநுதாபத்துடனே நோக்க வேண்டும். உரிமைகளை அடைய விரும்புகிறவர்கள் உரிமைகளை உடையவர்களைப் பகைவர்களாகக் கருதிப் போராடுவதிலும் பயனில்லை மேலும் உரிமையும் கடமையும் ஒன்று சேர வேண்டும். கோயிற் பிரவேசக் கிளர்ச்சி அன்புக் கிளர்ச்சி—அறக் கிளர்ச்சி—உண்மைக் கிளர்ச்சியாயிருத்தல் வேண்டும். அவ்வாறானல் இந்த இயக்கம் வெற்றி பெறும்.

இதனை யொட்டி நமக்குத் தோன்றும் யோசனையை இங்கு குறிப்பிடுவது நமது கடமையாகும். இந்த இயக்கத்தில் அநுதாபமுள்ளவர்கள் சமயத் தலைவர்கள், ஜனத் தலைவர்கள் முதலியவர்கள் அடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்டி இதுபற்றிச் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். இதில் பிராமணர்களும், பிராமணரல்லாதவர்களும் கலந்து வேலை செய்ய வேண்டும். இப்பொழுது கோயிற் பிரவேச இயக்கத்தை நடத்துகிற தனி மனிதர்களை மட்டும் கருதி இந்த இயக்கத்தைப் பெரிதாகவோ சிறிதாகவோ கருதாமல், இதன் நியாயம் ஒன்றை மட்டும் கருதி நாட்டிலுள்ள அறிஞர்கள் இதனைச் சிந்திக்க வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள பத்திராதிபர்களும், அறிஞர்களும், தலைவர்களும் தங்கள் தங்கள் கருத்தை வெளியிட்டு, இந்த இயக்கத்திற்கு ஆதரவு புரிவார்களென்று நம்புகிறோம். சமயம் நேரும்பொழுது இது பற்றி விரிவாக எழுதுவோம்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## மரண பயம்.

(ஸர். அர்பத்நட லேன் எழுதுகிறார்.)

இறப்பதென்றால் எதோ சித்திரவதைக் குள்ளாவதைப்போல எல்லோரும் நடுங்குகின்றனர். நமது சரீரத்திலிருந்து ஆவி பிரிந்து இத்தேகம் பயனற்றதாகிவிடும் நாளை நினைக்கும்பொழுதே பலருடைய உடல் நடுக்குகின்றது. சாவை விஷப் பாம்பைவிடக் கொடியதாக நினைக்கின்றனர். ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி ஒரு நாளைக்கு அவர்கள் சாகப்போவது நிச்சயம். மேலும் அது எவ்விதம் வருமென்றும் திட்டமாகச் சொல்ல முடியாது. ஒரு மனிதன் எப்பொழுது சாவானென்பதும் கூறுவதற்கில்லை. ஆனந்தமாக வாழ்நாட்களைச் செலுத்திக் கொண்டிருக்கும்பொழுது சிலர் தாங்கள் சாகப்போகின்றவர் என்ற நினைவே யில்லாமல் சந்தோஷமாக இருக்கின்றனர். அறிவுள்ள பலர் தாங்கள் ஒருநாள் சாகப் போகிறோம் என்ற நினைவினாலே இன்றோ நாளையோ, அன்றி எனமோ என்ற நினைவிலேயே இருந்து வருத்தத்தோடேயே தங்கள் காலத்தைப் போக்குகின்றனர்.

மனிதன் சாவைத் தன் வாழ்க்கையில் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு மாதிரியாக நினைக்கிறான். மத குருவுக்கு ஒரு எண்ணம்; ஆத்ம சாஸ்திரியின் எண்ணம் வேறு. இவ்வெண்ணங்கள் மனிதர்களுக்குள்ள பலவித நம்பிக்கைகளைப் பொறுத்ததாகவே இருக்கின்றன. ஆனால் உயிர் சரீரத்தை விட்டுப் பிரியும்பொழுது தாங்க முடியாத வேதனை யுண்டாகக் கூடியதென்பதே முக்கால் பாகம் மனிதர்களுடைய திடமான எண்ணம். இதைக் குறித்து செளக்வார்க் பாதிரியார் எழுதுவதாவது:—"இறந்து விடுவதால் அவனுடைய வாழ்க்கையே அத்துடன் முடிந்துபோகிற தென்ற கவலை பெரும்பாலோருக்கு இருப்பதாலேயே அவர்கள் சாவைக்கண்டு அஞ்சுகின்றனர். வாழ்க்கை எப்படி ஆரம்பிக்கிறதோ அப்படியே முடிவதும் இயற்கைதான். சிலர் வாழ்க்கை முடிந்துவிடுகிறதே என்பதைக் குறித்து பயப்படுவதில்லை. அவர்களுடைய வாழ்க்கைக் கஷ்டங்கள் நிறைந்திருந்தபடியால் திரும்பவும் வாழ்க்கை யில்லாமலே இறந்துபோகவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். தங்களுக்கு வாழ்க்கையில் இன்பந் தந்த மற்றவைகளையெல்லாம் விட்டுப் பிரியவேண்டியிருக்கிறதே என்ற எண்ணத்தினால் சாவைக் கண்டு நடுங்குகின்றர்.

சாவை நினைத்துப் பயப்படுவதும் அதைப் பற்றி வார்த்தை யாடுவதும் எனக்கு வெறுப்பாகவே தோன்றுகின்றது. சாவதற்கு ஏன் பயப்பட வேண்டுமென்பதுதான் எனக்கு விளங்கவில்லை. உலகத்தில் மனிதன் பிறப்பது எவ்விதம் இயற்கையோ அவ்விதமே இறப்பதும் இயற்கை என்பதை ஜனங்கள் மறந்துவிடுவதே பயப்படுவதற்குக் காரணம் மேலும் ஒருவன் தான் இறந்து விடுவதால் தன்னுடைய கஷ்டங்களெல்லாம் போய்விடுகின்றன என்பதையும் மறந்துவிடுகிறான். பயப்படுவதற்கு இதுவும் மற்றொரு காரணமாகிறது. மனிதர் தோன்றிய காலமுதற்கொண்டே சாவை நினைத்து நடுங்கும் குணமுள்ளவர்களாகவே இருக்கின்றனர்.

உண்மையில் இறப்பதில் எவ்வித கஷ்டமுமே யில்லை. அறியாமையும், மூட நம்பிக்கைகளுமே ஜனங்களை பயப்படும்படி செய்து வருகின்றன. படித்த அறிவாளிகள் கூட இறந்தபிறகு நரகத்தில் இடர்ப்பட வேண்டி நேருமென்ற எண்ணத்தினால் நடுக்குறுவதைக் காண்கிறேன். பலர் இப்பொழுது நரகமென்பதெல்லாம் சுத்தப் பொய் என்ற எண்ணமுடையவர்களாய் மாறிவந்த போதிலும், சாவு ஒரு பயங்கர சம்பவம் என்ற எண்ணம் மாத்திரம் இன்னும் அவர்களுடைய மனதில் இருந்துவருகிறது. இப்படிப்பட்ட மனோபாவம் இருந்துவருவது நமது நாகரீக நிலைக்கு மிக்கக் கேவலமானதென்பதே என்னுடைய திடமான நம்பிக்கை. அப்பயத்தைப் போக்கி

## இன்னுந் தூக்கமா?

இலங்கை நாடார் மகாஜனங்களின் அபிவிருத்தியின் பொருட்டு ஸ்தாபகமாகி நிகழ்ந்து வந்த "இலங்கை நாடார் க்ஷத்திரியர் ஐக்கிய சங்கம்" இது சமயம் என்ன செய்து கொண்டிருக்கின்றது? பொதுக் கூட்டங்கள் நடைபெற்று எவ்வளவு காலமிருக்கும்? சில காலமாகக் கூட்டங்கள் கூட்டாமலும், மகமை வசூலிக்க முயற்சியாமலும் காரியதரிசிகள் அயர்ந்து விட்டதேன்?

சுமார் ஓராண்டுக்கு முன் கூடிய கூட்டத்தின்போது வட்டிக்குக் கொடுத்து வசூலாகாதிருக்கும் நிதியை வசூலிக்கவும், மகமை வசூல் செய்யும் பொருட்டும் பிரசாரகர் நியமிக்கப்பட்டு, நாடார் பாங்கியிலேயே சங்கப் பணத்தைச் சேமித்துவைப்பதென்று தீர்மானித்ததுண்டா? அவ்வாறு நியதியின்படி சங்க நிர்வாகிகள் பணத்தைப் பாங்கில் சேர்த்து விட்டனரா? ஏன் இதுவரை கவனியாதிருக்கின்றனர்? இவ்வாறு பொது விஷயத்தைக் கைநழுவவிட்டிருப்பது விசனிக்கத்தக்கது. இனியேனும் சங்கத்தை நடத்துவதிலும், மகமை வட்டியிலிருக்கும் நிதி முதலியதை வசூல் செய்வதிலும் தக்க முயற்சி யெடுத்துக் கொள்வார்களாக என ஓர் குலாபிமானி எழுதுகிறார்.

---

நவீன உணர்ச்சியைப் புகுத்துவதற்குச் செய்ய வேண்டிய தென்ன? ஒரு குழந்தை விஷயங்களை கிரகிக்கும் ஆற்றல் அடைவதிலிருந்து சாவென்பது ஒரு இயற்கையான ததான்; அதை நினைத்து அஞ்ச வேண்டுவதில்லை என்ற எண்ணங் கொள்ளும்படி செய்யவேண்டும். இந்த எண்ணம் இறப்பதற்கு கொஞ்சம் முன்தான் அநேகமாய் எல்லோருக்கும் வருகிறது.

என்னுடைய வாழ்க்கைக்குள் அநேகர் இறந்ததை நான் பார்த்திருக்கக்கூடும். அவர்களில் பலர் இறப்பதைக் குறித்து அதிகமாகப் பயந்தவர்கள். அவர்களுடைய முடிவு காலத்தில் உண்டாகும் மன்சாந்தி இன்பத்தைக் கூட அச்சமயத்தில் அனுபவிக்காதபடி அவர்கள் கொண்டிருந்த பயம் செய்துவிடுகிறது. பிரக்ஞை இருக்கிறவரையில் சாகுந் தருவாயிலுள்ளவர் தங்கள் உற்றார் உறவினர்களையும் மற்றவர்களையும் விட்டுப் பிரிவதற்காக வருந்தியிருக்கலாம். ஆனால் கடைசி நிலையை அறியும் சக்தி ஒருவனுக்கிருக்குமாகில் அவன் என்றும் இறப்பதற்கு அஞ்சி வருந்தியிருக்கமாட்டானென்பது திண்ணம். முடிவில் எவ்வித கஷ்டமுமில்லாததோடு இயற்கையான ஒரு மாறுதலே ஏற்படுகிறது.

பலருக்குத் தூக்கம் வருவதைப்போல் வந்து அப்படியே இறந்துவிடுகின்றனர். எப்படிப்பட்ட அனுபவமுள்ளவர்களுக்கும் உயிர் இந்த சமயத்தில்தான் நிற்கும் என்று சொல்ல முடியாது. வாழ்க்கையில் அதிகக் கஷ்டங்களை அனுபவித்து வந்தவர்கள் சாகும்பொழுது துன்பங்களிலிருந்து விடுதலை யடைவதைப்போன்ற உணர்ச்சியே வாழ்க்கை முடியும்போது அடைகின்றனர். துர் நடத்தைகளிலுள்ள நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. வருஷா வருஷம் கணக்கற்றவர்கள் இறந்து கொண்டிருக்கின்றனர். அதில் பயப்படக் கூடிய விஷயம் ஒன்றுமில்லையென்பது நன்றாய்த் தெரிகிறது. உலகத்தில் மனிதனுக்கு ஏற்படும் நிகழ்ச்சிகளில் இயற்கையாகச் சாவதே எவ்வித துன்பமும் கொடாத நிகழ்ச்சியாகும்.

---

தாங்கள் கட்டிவைத்த

கோவில்களில்

கடவுள் விக்கிரகங்களை

அருகில் போய்ப் பார்க்க

தங்களுக்கு உரிமை

கிடையாதா?

## நாடார் மகாஜன சங்கம்.

### சில தோற்றங்கள்.

(ஒரு நண்பன் எழுதியது.)

30—5—27 மித்திரன் தலையங்கத்தினால் சிறிது அனுகூலமேற்பட்டிருப்பதாகவே எண்ண வேண்டியதிருக்கிறது. காரியதரிசிகள் தங்களோடு ஒத்துழைத்து பிரசாரஞ் செய்து, சமூக வேலை செய்ய முன் வர வேண்டுமென்று ஸ்ரீமான் செளந்தரபாண்டிய நாடார் அவர்களுக்கு கடிதங்களும், தந்திகளும் அனுப்பியிருப்பதாகவும், அன்னவரும் சீக்கிரம் மதுரைக்கு வருவதாக பதில் கொடுத்திருக்கிறரென்றும் தெரிகிறது.

7—6—27-ல் ஸ்ரீமான் செளந்தரபாண்டிய நாடார் அவர்கள் விருதுநகரிலிருந்து மதுரைக்கு விஜயஞ் செய்ததாகவும், அன்று மாலை 3 மணிக்கு சங்கம் ஆபீஸில் சங்கம் வைஸ்பிரஸிடெண்டு ஸ்ரீமான் செளந்தரபாண்டிய நாடார், காரியதரிசிகளான ஸ்ரீமான்கள் பா. ம. பாண்டிய நாடார், ஆ. அ. ஆறுமுக நாடார், நாடார் பிரஸ் மானேஜிங் டைரெக்டர் க. முத்துக்குமாருநாடார், ஊழியப்பிரசார சபை காரியதரிசி ப. ரா. முதநச்சாமி நாடார், சங்கம் ட்ராவெலிங் ஏஜெண்டு அண்ணாமலை நாடார் இவர்கள் ஒன்று கூடி இனி செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி யோசித்ததாகவும் தெரிகிறது.

முக்கூடலில் ஏற்பட்ட ஒற்றுமைக் குறைவை நிவர்த்தி செய்யும்பொருட்டு நியமித்த கமிட்டி இதுவரை எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாததால் முதலாவது தலைவர்கள் முக்கூடலுக்குச் சென்று அங்குள்ள தலைவர்களுக்குள் சமாதானத்தை யேற்படுத்தி அவர்கள் ஏற்கனவே அழைத்திருக்கிற 11-வது கான்பரன்ஸ் திருநெல்வேலியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்வதென்றும், அதற்கு செளகர்யமில்லாவிட்டால் வேறு எவ்விடத்திலாவது நடத்துவதற்கான முயற்சிகளைச் செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீமான் செளந்தரபாண்டிய நாடார் அவர்கள் தாமும் முக்கூடலுக்கு காரியதரிசிகளுடன் வருவதாகச் சொல்லிச் சென்றிருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீமான் நாடார் அவர்கள், 7—6—27ல் சங்கம் ஆபீஸில் தீர்மானித்துக் கொண்டபடி பார்த்துகொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

அபிமானிகள் சங்கத்தை மேன்மேலும் விருத்தி செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதைப் பொன்னாலும், புகழாலும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். அண்மையில் நம் மத்தியில் நடக்க வேண்டியதாயுள்ள கான்பரன்ஸ் வேலையையே பிரதானமாகக் கவனித்தல் நலம். கான்பரன்ஸைக் கூட்டினால் தான் புதிய விழிப்பேற்படும். குலாபிமானிகளும், ஜனங்களும் தலைவர்களோடு ஒத்துழைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். காரியதரிசிகளும் தீவிரப் பிரயாசை யெடுத்துக்கொள்வார்களென்று தெரிகிறது.

---

### விஞ்ஞாபனம்.

கொளும்பு, கேகாலை உந்திக்கடை போஸ்டு தனிமலை தோட்டத்தின் ரோட்டோரமாக ஸ்ரீ முருகக் கடவுள் ஆலய மொன்று புதிதாக நிர்மாணிக்க திருவருட்டுணைகொண்டு ஏற்பாடாகி வருவதால் தரும சீலர்கள்யாவரும் பக்திப்பரவசத்தின் பொருட்டு தங்களாலான திரவிய சகாயஞ் செய்யுமாறு பக்தியை முன்னிட்டுக் கேட்டுக் கொள்கிறோம்.

வீ. வீரா. வீரபத்திர நாடார்.

---

### இரத்தினபுரி.

30—5—27-ல் இவ்வூரில் பெய்த பெருமழையால் நகரில் 6 அடி உயரத்திற்குத் தண்ணீர் தேங்கிவிட்டது. இதனால் உயிர்ச்சேதமில்லை யென்றாலும் 300 வீடுகள்வரை நீரில் மூழ்கிவிட்டன என்று ஸ்ரீமான் தை. வி. பிலவேந்திர நாடார் எழுதுகிறார்.

---

## நாடார்களுக்கோர் வேண்டுகோள்.

சான்றோர்குல சகோதரர்களே!

தண்புனல்சூழ் இத்தொல்லுலகில் பூதவுடம்பெடுத்த மக்கள் யாவரும் தம் தம் இனத்தாரை சீர்திருத்த முற்படுவது இயற்கை; அதுவே நியாயமாகும். இப்புனிதமார்க்கத்தில் இதுவரையும் தங்களது உள்ளத்தைச் செலுத்திக் கொண்டிருந்த நம் மக்கள் சுமார் 2 வருஷகாலமாக குல சேவையை விடுத்துவேறு பலவழிகளை அடுத்துகொண்டு வருத்தமுறாமலிருக்கமுடியவில்லை. நம் சகோதரர்கள் எந்நிலையில் இருக்கின்றார்கள் என்பதை உணராதார்யாருமிலர். தென்னாட்டில் குறிப்பாக கிராமாந்தரங்களில் நம் சமூகத்தினர் அடையும் இன்னல்களை நினைக்கின் சகிக்கத்தாமன்று. அந்தோ! அரசுரிமை துறந்த அந்நாள் முதல் இந்நாள்வரை ஏனையஜாதியார்களால் இழைக்கப்பட்ட எண்ணிறந்த துன்பங்களைக் களையசெல்வந்தர்கள் போதியவாறு கைகொடுத்தாதரியாது கொண்டு ஏழைமக்கள் குறைபாடுகள் பூரணமாய் நிவர்த்திபெறாக்கதேடில. நமது பராமுகத்தைக்கண்ட இதர ஜாதியார்களிற் பலர் வரம்பின்றி பிழைகள் பல செய்யவாரம்பித்தனர். ஏராளமான நம் சகோதரர்கள் பல கஷ்டங்களுக்கிடையில் பிழைக்கத் தொழிலற்று தற்கச்சாதனமற்று பேதைகளாகத் திரிவதைக்காண நமது மனம் சகிக்குமா வெனக்கேட்கின்றேன். சுருங்கச் சொல்லின் நமது ஏழை குல நேசர்கள் தென் ஆப்பிரிக்கா இந்தியர்களைச் சுகவாசிகளாக்கு நின்றார்களென்றே சொல்லலாம். தென்னாப்பிரிக்கா இந்தியர்விஷயமாகப் பரிந்து பேசும்தேச மகாஜனங்களும் நாடார் குல தேசியவாதிகளும் நாடார்மக்களது இன்னல்களை அகற்ற முற்படாததேனோ?

இந்நிலையில் நம் குலத்துதித்த கல்விமான்கள் செல்வந்தர்கள் யாவரும் நம் ஜன சமூகத்தின் தற்கால நிலைமை என்ன? இருக்கும் குறைகளென்ன? அவைகளால் நாம் அடைந்து கொண்டிருக்கும் கஷ்ட நஷ்டங்களென்ன என்பவைகளை ஆராய்ந்து நிவர்த்தி பண்ணி குலப்பணிஆற்றுவதை விட்டு தங்களது முயற்சிகளைத் தளர்த்துவது கண்டுவருந்தாமலிருக்க முடியவில்லை. நம்குல வாலிபர்களிற் பலர் நம் சமூக மாந்தர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் ஆயிரக்கணக்காகவிருக்க அவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு ஜாதியை அடியோடு மறந்து விடுவது நல்லதல்ல. காலஞ்சென்ற தலைவர்கள் த. இரத்தினசாமிநாடார், மாணிக்க வாசகநாடார், சற்குணநாடார், வடிவேல் முருகநாடார் முதலியோரின் பூரண நோக்கமான ஜாதி முன்னேற்றத்தை அவ்வளவாகக் கவனியாது விடுவது மேன்மைதாத்தக்கதல்ல. அன்னோர்களின் நோக்கத்தைப் பூர்த்திசெய்து அவர்களது புனித ஆத்மசாந்தியடையுமாறுநாம்செய்யமுன்வர வேண்டும். ஆகலான்சகோதரர்களே!பெரியோர்களே!! வாலிபர்களே!!! ஜாதீய வேலைகளை முடித்து மற்றவேலையை ஆரம்பியுங்கள். இன்னும் நாம் தேர்ச்சியடைந்து பிரகாசிக்க வேண்டுமென்ற நன்னோக்கத்துடன் நம் கற்பக விருக்ஷமாகிய நாடார் மகாஜன சங்கம் நாட்டப்பெற்றது. இச்சங்கத்தின் மார்க்கமன்றி நாம் ஒருங்கே விருத்தியடைய மார்க்கமில்லை. அதைவிட்டகன்றிடின் நாம் முன்னேறலாமென்பது அசாத்தியம். தற்காலத்தில் ஓர் வகுப்பார் காங்கிரஸ் பொது ஸ்தாபனம் என்று வைத்துக்கொண்டு தேச சேவை என்ற போர்வையை போர்த்திக் கொண்டு குல சேவை செய்துவருகிறார்கள் என்பது உலகமறிந்தவிஷயம். அப்படியிருக்க நாம் குல சேவைக்கென்றே நாட்டப் பெற்ற நமது நாடார் மகாஜன சங்கத்தை கவனியாமலிருந்தால் நம்மக்கள் எவ்விதம் முன்னேற்றம் அடைவது? ஆகலான் நாடார் குலத்துதித்தார் யாவரும் நம் சங்கத்தை மங்களப்படுத்த பதினோராவது (11-வது) கான்பரன்ஸை கூடிய சீக்கிரம் நடாத்துவதற்கு யாவரும்முக்கியபிரயாசை எடுத்துக்கொள்ளும்படியாக பன்முறை வேண்டுகிறேன்.

S.V.R.M.P. தனுஷ்கோடி நாடார்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
பிரபவ ௵ வைகாசி ௴ ௩௧ ௳

## கோயிற் பிரவேசம்.

கோயிற் பிரவேசத்தைப் பற்றி 2—6—27-ல் வெளியான 'லோகோபகாரி' யில் திருச்சி ஸ்ரீமான் ஆர். நாராயண அய்யங்கார் ஒரு கட்டுரை வரைந்திருக்கிறார். அக்கட்டுரையை ஒட்டி உபகாரியும் ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அவ்விரண்டையும் மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம்.

தமிழ் நாட்டில் சகல வகுப்பினருக்கும் கோயிலுக்குட் சென்று சுவாமி தெரிசனம் செய்யச் சர்வ சுதந்திரங்களும் உண்டென்றும், சுவாமிக்கும், மனிதனுக்கும் இடையில் தரகர்கள் வேண்டாமென்றும் கிளர்ச்சி செய்து வரும் ஜஸ்டிஸ் கட்சியார் முயற்சியைப்பற்றி ஸ்ரீமான் ஐயங்கார் கடுநிலைமையாகவே எழுதியிருப்பதை மிகவும் பாராட்டுகின்றோம். ஆனால் கட்டுரை ஆரம்பத்தில் தாழ்ந்த வகுப்பினரைக் கோயில்களுக்குட் செல்லவிட வேண்டும் என்கிற இயக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்பதத்தையே உபகாரியும் தலையங்கத்தில் உபயோகப்படுத்தியிருக்கிறது. இப்பதத்தைக் கட்டுரைக்காரர்களும், பத்திரிகைகளும் உபயோகப்படுத்துவது மிகவும் தவறானதென்றே கருதுகின்றோம். இந்தியாவில் கோயில் பிரவேசத்தில் ஒருவகுப்பினருக்குமட்டுமல்ல, ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஒவ்வொரு விதமான தடையிருந்து வருகிறதென்பது உலகப் பிரசித்தமாயிருக்கிறது. ஆனால் அர்ச்சகர்கள் மட்டும் சுவாமியின் அருகே போகும் வழக்கமிருந்து வருகிறது. அவ்வர்ச்சகனே தென்னாப்பிரிக்கா சென்றால் கோயில் விஷயத்தில் நாய்களோடு தான் நிற்க வேண்டும். ஏனென்றால் அங்கே கருப்பு மனிதரும், நாயும் கோயிலுட் போகக் கூடாதென்று ஓரிடத்தில் எழுதிக் கட்டப்பட்டிருக்கிறது. இதில் யார் தாழ்ந்தவர்கள்? யாரைத் தாழ்ந்தவர்களென்று கருதுவது? ஆண்டவன் படைப்பில் யார் தாழ்ந்தது? ஒன்றுமே கிடையாது. தன்னலப் பேய் பிடித்த பாவிகளால் தாழ்த்தப்பட்டிருக்கலாமே யன்றி உண்மையில் தாழ்ந்ததே இல்லை யென்பதுறுதி. உபயோகிக்க வேண்டிய அவசியம் வந்தால் தாழ்த்தப்பட்டவரென்கலாமே தவிர தாழ்ந்தவர் என்று சொல்வது கண் மூடித்தனமென்றே கருதிக் கண்டிக்க நேரிடும்.

இவ்வியக்கத்தை நடத்தும் கர்த்தாக்கள் சில சமயம் நெறி தவறிப் பேசிவிடுவதாக ஸ்ரீமான் ஐயங்கார் கூறியிருப்பது உண்மையாகவுமிருக்கலாம். உண்மையாயின் அது தவறென்பதை ஒப்புக்கொண்டு திருத்திக் கொள்ளவும் வேண்டும். தவறு கண்டோர் அத்தவறு எதனால் விளைகிறதென்பதை உணரவும் வேண்டும். வாக்கு வன்மையுள்ளவனென வழுத்தும் மகானுபாவன் ஸ்ரீ சத்தியமூர்த்தியே வார்த்தையில் வழுக்கி விழுந்து மன்னிப்புக் கேட்டுவிடுகிறாரென்றால் மற்றவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று நம்புபவர்கள் யாவரும் கோயிலுக்குள் பிறவேசிக்கலாம் என ஸ்ரீமான் ஐயங்கார் அபிப்பிராயப்படுவதினாலே மனிதர்களெல்லாம் பிரவேசிக்கலாமென்பதுதான் அர்த்தமென்று அபிப்பிராயப்படுகிறோம். ஏனென்றால் இந்தியாவில் நாஸ்திகரை நாம் பார்த்ததே இல்லை. எம் மதஸ்தரும் தெய்வம் ஒன்றுண்டென்ற நம்பிக்கையுடையவர்களே யாம். எவரும் எக்கோயிலுக்கும் சென்று இறைவனை வணங்கலாம்.

இவ்விஷயத்தைப்பற்றி பத்திரிகைகள் மௌனம் சாதிப்பதைப் பற்றி ஸ்ரீமான் ஐயங்கார் கண்டித்திருப்பது நியாயந்தான். உபகாரியும் பத்திராதிபர்கள் கருத்தை வெளியிடக் கேட்டிருப்பது கவனிக்கத்தக்கதே. தற்கால நிலைமையில் உலகத்தை உயர்த்தவும், தாழ்த்தவும் பத்திரிகைகளுக்கே வல்லமையுண்டென்பதை அறிந்தே ஸ்ரீமான் ஐயங்கார் பத்திரிகையின் உதவி தேவையென்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். இதை எல்லாப் பத்திராசிரியர்களும் உணர்ந்து கோயில் பிரவேச இயக்கத்தை ஒரு முடிவுக்கு வரச் செய்ய வேண்டும். இலதேல் விபரீதமாக முடிந்தாலும் முடியலாம். மனித வாழ்க்கையில் உண்பதும், சுகிப்பதும், தொழுவதும் பிரதானமாகும். பிரதானத்திற்கு அவமானம் நேரிடும்போது ஆவேசமுண்டாகி அலங்கோலமாவது சகசமாயிருக்கிறது. ஆகையால் இவ்வியக்கத்தை கிள்ளுகீரையாக நினைத்துத் தள்ளிவிடுவது தகாது.

பிராமணப் பத்திரிகைகள் இதைப்பற்றி அதிகச் சிரத்தையெடுத்துக்கொள்ள மாட்டாது. அவைகள் இவ்வியக்கத்தை நசுக்கிவிடத்தான் முயற்சி செய்யக் கூடும். எனவே "தமிழ் நாடு" "நவசக்தி" "குடியரசு" "திராவிடன்" "ஜஸ்டிஸ்" "குமரன்" "ஊழியன்" முதலிய பிராமணரல்லாத பிரபலப் பத்திரிகைகளே இவ்விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழர்கள் கட்டிய ஆலயங்களில் தமிழ் மக்கள் தொழுவதற்கு உரிமையில்லையென்றால் வெளி நாட்டார் எவ்வாறு நினைக்கக்கூடும்! உரிமை மறுப்பவர்கள் இரக்கமற்ற பாவிகள் என்றும், உரிமையை மீட்க முடியாதவர்கள் கோழைகளென்றும் கூற மாட்டார்களா? பாவிகளுக்கும், கோழைகட்கும் பாரில் சுயராஜ்யமளிப்பது ஆபத்தென்று ஆங்கிலேய அரசாங்கத்தார் கூற மாட்டார்களா? சட்ட மூலமேனும், சர்க்கார் மூலமேனும் இப்பிரச்சினை தீர்ந்துவிடாது. தமிழ் நாட்டு ஜனங்களாலும், தலைவர்களாலுமே ஆக வேண்டும். அதற்குரிய வேலையை பத்திரிகைகள் தான் ஆரம்பிக்க வேண்டும். "லோகோபகாரி" யைப்போல் பத்திராசிரியர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவார்களாக.

இவ்வியக்கம் வெற்றியடைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டுமென்பதற்கு ஸ்ரீமான் ஐயங்கார் வழி விதிகள் குறிப்பிட்டிருக்கிறார். அவைகளெல்லாம் முடிவில் சத்தியாக்கிரகம் ஒன்றையே தழுவுகின்றன. சத்தியாக்கிரகம் சரியான முறை யென்பதில் சந்தேகமில்லை. ஆனால் சத்தியாக்கிரகத்துக்கு ஜனங்களைத் தயார்ச் செய்ய ஒரு யுகமானாலும் ஆகலாம். இதற்குள்ளாக இயக்கத்தின் ஆர்வம் குறைந்து போகவுங் கூடும். ஆகையால் சகலருக்கும், சுவாமி தெரிசனம் செய்யத் தடையுள்ள கோயில்களைச் சகலரும் பகிஷ்காரம் பண்ணி சர்வ மான்யங்களையும் நிறுத்திவிட்டால் எல்லாம் நேர்மைக்கு வந்துவிடக் கூடும். ஜனங்களைச் சத்தியாக்கிரகத்துக்குத் தயார்ச் செய்வதைப் பார்க்கிலும் பகிஷ்காரத்துக்குத் தயார் செய்வது சுலபமாகவுமிருக்கும். கோயில் சம்பந்தமான சில குருட்டு நம்பிக்கையும் அறியாமையுமகலும். கோயில் சம்பந்தமாய் குருக்களுக்குக் கொடுக்கும் தண்ட வரி குறையக் குறைய நாட்டில் செல்வம் விருத்தியடைந்து தரித்திரந் தங்குமிடமில்லாமல் மறைந்துபோகும். ஆகையால் பகிஷ்கரிப்பே சிறந்த முறையென்று கருதுகிறோம். ஆனால் சர்வ சுதந்திரங்களையும் கைப்பற்றுதல் அவசியமாகத் தோனுமிடத்தில் சத்தியாக்கிரகத்துக்குப் பக்குவமிருந்தால் சத்தியாக்கிரகம் செய்துதான் தீர்க்க வேண்டும்.

இது விஷயமாக ஒரு மகாநாடு கூட வேண்டுமென்ற ஸ்ரீமான் ஐயங்காரும், உபகாரியும் அபிப்பிராயப்படுவது சரி யென்றே நம்புகிறோம். நமது தமிழ் நாட்டுக்குப் பக்கமாயுள்ள வைக்கத்தின் மக்கள் மனத் துயரத்தை மாற்றக் கச்சை வரிந்து கட்டிச் சென்ற உத்தமர்களாகிய ஸ்ரீமான்களான ஈ. வி. இராமசாமி நாயக்கர், டாக்டர் நாயுடு, ஸி. ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் ஏன் இவ்விஷயத்தில் முன்வரக் கூடாதென்று கேட்கிறோம். தக்க சமயத்தில் கோயம்புத்தூர் மகாநாடு கூடப் போகிறது. தேசப் புனருத்தாரணத்திற்கு வேண்டிய பல அம்சங்கள் இம் மகாநாட்டில் முக்கியமாய் ஆலோசனைக்கு வரக் கூடும். சிரத்தையுள்ள ஒவ்வொருவரும் மகாநாட்டில் இவ்விஷயத்தைப்பற்றி சரியான முடிவுக்குக் கொண்டு வரத்தக்க முயற்சி செய்வார்களாக. "லோகோபகாரி" கூறும் வண்ணம் பத்திராதிபர்களும் தத்தம் கருத்துகளை வெளியிடுவார்களாக.

# குறிப்புகள்.

### காங்கிரஸ் தலைவர்.

கோகலே ஹால் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் பேசும்போது, "ஒரு மாகாணத்தில் பல ஜில்லாக்கலெக்டர்கள் ஒரு பெரிய அதிகாரிக்குக் கீழிருந்து வேலை செய்கையில், பிசகுகள் செய்தால் அதை பகிரங்கப்படுத்தி விசாரணை நடத்துவது கிடையாது. தலைமை வகிப்பதென்றால் யாவரையும் நம்பிப் பெருந்தன்மையாக இருக்கவேண்டும். சமயத்தில் வாயை மூடிக்கொண்டுமிருக்க வேண்டும்" என்று சொன்னாராம். உண்மைதான். பல தடவைகளில் கலெக்டர்கள் தவறுதலாக நடந்திருந்தாலும் கவர்னர் மன்னித்து விட்டிருக்கலாம். அதுசரியென்பது திரு. அய்யங்காரின் அபிப்பிராயமானால் அதிகார வர்க்கம் தவறிழைக்கிறதென்றும் அதை கவர்னர் முதலிய பெரிய அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்றும் ஓயாது முறையிடப்படுவானேன்? ஜெனரல் டயர் பாஞ்சாலத்தில் செய்த கொடுமையை விசாரிக்கக் கமிஷன் நியமிக்கவேணுமென்று கேட்ட காரணமென்ன? பஞ்சாப் கவர்னர், டயர் செய்தது சரிதானென்று சொல்லவில்லையா? அவ்விதக் கொடுமையான அதிகாரவர்க்கத்துடன் ஒத்துழைக்கக்கூடாதென்றல்லவா காங்கிரஸ் மஹாசபை ஒத்துழையாமையை யேற்றுக்கொண்டது? இவைகளெல்லாம் அய்யங்காருக்குத் தெரியாதா? ஓகோ! ஞாபகம் வந்துவிட்டது. தற்கால காங்கிரஸ் தலைவர் திரு. அய்யங்கார் ஒத்துழையாமையை ஆரம்பித்த மஹாத்மாகாந்திக்கு மண்டையில் மூளையில்லையென்று சொல்லவில்லையா? சரிதான் சரிதான்; தேச மக்கள்தான் ஏமாந்து போய்விட்டனர். திரு. அய்யங்கார் அன்றுள்ளபடிதான் இன்றுமிருக்கிறார். அதிகாரவருக்கத்துக்கு அடிவருடியவரல்லவா? காங்கிரஸ் என்னும் பேரிலுள்ள நம்பிக்கையாலும் அய்யங்கார் பேசிய முட்டுக்கட்டைப் பேச்சினாலும் ஏமாந்த ஜனங்கள் கருமபலனை அனுபவிக்கவேண்டியதுதானே? அவர் கொள்கைப்படி அன்று திரு. பிரகாசம் அவர்கள்பேசக் கூடாதென்ற சத்தியமூர்த்தி உத்தரவு செய்தபோது பேசாதிருந்ததும் நியாயமே.

### குடும்பச்சச்சரவு.

சுயராஜ்ஜியக்கட்சியின் மோசமான நடத்தையும் காரியங்களும் அவர்களுக்குள்ளேயே பொறுக்கமுடியாமல் அம்பலத்துக்கு வந்துவிட்டது. இவைகளுக்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சிதான் காரணம். மந்திரிகளின் சம்பளத் தீர்மானத்தை ஜஸ்டிஸ் கட்சியார் கொண்டுவராமலிருந்தால் இவ்வளவும் வெளிவந்திருக்குமா? சில பிராமணரல்லாதவர்கள் சுயராஜ்ஜிய வாதிகளாகிய பார்ப்பனர்களின் மாயவலையில் வீழ்ந்து சிக்கிக்கொண்டு படும்பாடு சொல்லத்தரமன்று. ஓர் காலம் ஜஸ்டிஸ்கட்சியின் உண்மையான உழைப்பாளியாயிருந்த திரு. ஓ. கந்தசாமிசெட்டியார் சுயராஜ்ஜியக்கட்சியாரின் சண்டையை குடும்பச் சச்சரவு என்று சொல்லி பழிவாங்குகிறார். பார்ப்பன சுயராஜ்ஜியவாதிகள் சென்ற கார்ப்பொரேஷன் எலெக்ஷனில் திரு. கந்தசாமிசெட்டியாரைக் கொண்டு திரு. ஓ. தணிகாசலஞ்செட்டியாருக்கு விரோதமாய்ப் பேசும்படி செய்து, தணிகாசலத்தின் உடன்பிறந்த தமையனாரே என்ன சொல்லுகிறாரென்று கேளுங்களென்று ஓட்டர்களிடத்தில் சொல்லவில்லையா? அவர்கள் குடும்பச்சச்சரவை வெளியிடும்படி செய்தபழிக்காக திரு செட்டியாரவர்களும் உண்மையைச் சொல்லமுன்வந்துவிட்டார். இப்போது சுயராஜ்ஜியக்கட்சியில் முக்கியஸ்தரான திரு. ஸ்ரீநிவாசய்யங்கார், திரு. ரெங்கசாமி அய்யங்கார், திரு. சத்தியமூர்த்திஅய்யர், திரு. பிரகாசம் பந்துலு, திரு. சாம்பமூர்த்தி ஆகியவர்கள் பிராமணர்களல்லவா? இது அவர்கள் குடும்பச்சண்டைதானே? திரு. கந்தசாமிசெட்டியாருக்காவது திரு. சாமி வெங்கிடாசலம்செட்டியார், திரு. முத்துரங்க முதலியார் முதலியவர்களுக்காவது இதனால் லாபமென்ன? தலைவர்களை மீறி ஏதாவது பேசினால் திரு. அய்யங்கார் காங்கிரஸ் துரோகிகள் என்று சொல்லி இவர்களை கீழே தள்ளிவிடுவாரன்றோ? அதனாலேதான் இன்னும் சுயராஜ்ஜியப் புலிக்கு வால்பிடித்துக் கொண்டு திரிகிறார்கள்.

### ஜஸ்டிஸ் கட்சி.

டாக்டர் நாயர், திரு. தியாகராயர் முதலியவர்கள் முயற்சியால் ஒன்று சேர்க்கப்பட்ட பிராமணரல்லாதார் ஜஸ்டிஸ் இயக்கம், தலைவரிருவரும் காலஞ்சென்றபின் அதிகாரப் பதவி மோகத்தில் தற்காலத்தலைவர்கள் தேசத்தொண்டை மறந்து மஹாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தைக்கூட யேற்றுக்கொள்ளாததாலேயே தற்போது நடந்த தேர்தலில் தோல்வியடைந்தது. இனியாவது பிராமணரல்லாதாரின் நலங்கருதி உழைக்க முற்பட்டாலல்லது எவ்வித ஆக்கமும் தேசத்தில் பெற முடியாது. பிராமணரல்லாதார் யாவருஞ்சமம் என்று வாய்ச்சொல்மாத்திரம் போதாது; செயலில் காட்ட வேண்டும். தீண்டா

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கும்பகோணம்.

### பாண்டிய குல நாடார் பஜனைமடம்.

நான் இரண்டொரு தினங்களுக்கு முன் இவ்வூர் போய் சேர்ந்தது. அது சமயம் ஷை மடத்தைப் பார்வையிட்டு பரமானந்தமடைந்தேன்.

ஷை மடம் அவ்வூர் கனவான்கள் வீ. சந்திவீரநாடார் முதலிய பிரமுகர்களின் முயற்சியின்பேரில் அவ்வூர் குலாபிமானிகளின் பொருளுதவி கொண்டு அமைக்கப் பெற்றதாகும். வெளி ஹாலில் குரோட்டன்ஸ் செடிகள் வரிசையாக வைக்கப்பெற்றும் பொதுஜனங்களுக்குத் தண்ணீர்தர்மம் வைக்கப்பெற்றுமிருந்தது. மடத்தினுள்ளே விசித்திரச்சணுடிகளால் அமைக்கப்பெற்ற கல்யாணக் கூடமும் நல்ல வசதியுள்ள பின் கட்டுகளும் தொல்லையில் மல்லிகை முல்லை கதலி முதலான சோலை சூழ்ந்த திவ்ய தீர்த்தக்கிணறும் ஸ்நானபானங்களுக்கான நல்லவசதிகளும் மேன்மாடியில் மீட்டிங் கூடுவதற்கான அழகிய மேடையும் சமார் ரூபாய் 12 ஆயிரத்திற்கு மேல் மதிப்பிடக்கூடியவாறு நிர்மாணிக்கப்பெற்றிருக்கிறது.

ஆகவே, என் குலாபிமானிகளே! ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தவாறுள்ள வழிகளில் இம்மாதிரியான பொதுக் கட்டடங்களை ஏற்படுத்தி பஜனைமடமென்றோ சங்கமென்றோ நல்ல பெயரைக் கொடுத்து மாசாமாசம் மீட்டிங்கூடி நாம் முன்னேற்றமடையக்கூடிய விதிகளைப் பற்றிப்பேசித் தீர்மானமூலம் நிறைவேற்றி அநுஷ்டானத்திற்குக்கொண்டுவரப் பிரசாரம் செய்வதுடன் வாராவாரம் பகவத்பஜனைகளும் நடந்தேறச்செய்து ஷை கட்டடங்களில் தத்துவநூல்களும் வர்த்தமானப் பத்திரிகைகளும் தருவித்து மாணாக்கர்கள் முதலான பொதுமக்கள் யாவரும் கட்டணமின்றி வாசிக்கும்படி செய்வதுடன் இரவு பகல்யாத்திரீகர்கள் தங்கத்தக்க வசதியுடன் இடமளிக்கவும் வேண்டும்.

சகோதரர்களே! ஜாதிமத பேதமின்றி ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்றபேரொலி முழங்கும் இக்காலத்தில் நம்மவர்களுக்குள் ஒவ்வொரு ஊரிலும் பல பிரிவுகளும் அவ்வொவ்வொரு பிரிவிலும் சின்னக்கக்ஷி பெரியகக்ஷி யென்ற துவேஷமும் பொறுமையும் கொள்ளுதல் அறியாமையே ஆகும். ஆகையால் என் குலத்தவர்களே! நாம் மனஸ்தாபமின்றியும் துவேஷமின்றியும் ஒன்று சேர்ந்து சங்கங்கள் அமைத்து மதுரைநாடார் மகாஜன சங்கத்தின் ஆதரவு பெற்று பல நல் விஷயங்களை ஆலோசித்தும் அனுஷ்டித்தும் ஒற்றுமையாலாகும் பயனைப் பெற பன்முறையும்மன்றாடி வந்தனத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வி சாமிநாதநாடார்,
திருவாளூர்.

---

தார் என்று ஒதுக்கப்பட்டவர்களையே முதலில் முன்னேற்றவேண்டும். மற்ற சமூகத்தார்களுக்குள்ளிருக்கும் சாதித் துவேஷங்களை மாற்றுவதற்கு அதிதீவிர முயற்சி எடுக்கவேண்டும். நாம் சொல்வதைக்கண்டியாரும் பயப்படவேண்டியதில்லை. முதலாவது நீ அங்கே நில்; நீ இங்கே நில்; நான் வேறிடத்தில் நிற்கிறேன்; நீ தொடாதே; நான் தொடமாட்டேன் என்னும் பேதம் ஒழிந்தாலே பாதிமுன்னேற்றம் வந்துவிட்டது. சாப்பிடுவதும் கலியாணஞ்செய்வதும் அவரவர் இஷ்டம்போல் நடக்கட்டும். ஆனால் பலரும் ஒன்று சேரவேண்டிய இடத்தில் சாகபக்ஷணங்கொள்வோர் ஒரு கூட்டமாகவும் மாமிச உணவு கொள்வோர் ஒரு கூட்டமாகவுமிருந்து சாப்பிடுவதை வழக்கத்தில் கொண்டுவருவது நலம். ஒரே கோத்தில் எல்லோரும் சாகபக்ஷணமே சாப்பிடக்கூடிய சந்தர்ப்பங்களில் பிரிவினை செய்து வைப்பதும்கூடாது. இவ்வித ஊழியமே இப்போது தேசத்துக்கு அவசியம் வேண்டற்பாலது. ஜஸ்டிஸ்கட்சி தலைவர்கள் கவனிப்பார்களா?

---

## பல திரட்டு.

மலையாளம் தீயர் வகுப்பைச் சேர்ந்த லக்னோ சாலகலாசாலை பொருளாதார ஆசிரியர் ஸ்ரீ கே. பி. கருணாகரனுக்கும் ஜெர்மன் மாது ஸ்ரீமதி பிராவின் மார்கேட் ஜார்மாருக்கும் வர்க்கலையில் சென்ற மாதம் திருமணம் நடந்தது. ஸ்ரீ நாராயண குருஸ்வாமிகள் புரோகிதம் செய்தார்.

* *

சென்னை ஹோம்ஸ் கம்பெனியில் வேலை பார்த்த நாராயணசாமி நாயுடு காலஞ்சென்றதையிட்டு அவரது நண்பர்கள் அனைவரும் இறுதிச் சடங்குகளுக்கு கூடலை கேயிருந்தனர். அதில் ஒருவர் ஆதித்திராவிடர். இச்சடங்கில் நண்பர் ஆதித்திராவிடரைக் கலக்கவிட சம்மதயில்லாத பொன்னுசாமி நாயக்கர் தாவாச்செய்து எதிர்த்துப் பேசிய குப்புசாமி முதலியாரைக் குத்திக் கொன்றுவிட்டார். பாழும் ஜாதிய வெறிமடமையால் எங்கு நுழைந்து எக்கதியில் விட்டது!

* *

உயரமான வீடுகளால் ஆபத்துத் தானென தாமஸ் எடிஸன் கூறுகிறார். ஆனால் அமெரிக்கா அடுக்கடுக்காய் பல மாடிகளை உயர்த்திக் கொண்டு போவதில் போட்டி போடுகிறது.

* *

இந்தியா மந்திரி சபையில் ஸர். எட்வர்டு கெயிட்டின் வகித்து வந்த ஸ்தானத்தில ஸர். ஹென்றி வீலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* *

சென்னையில் புடவை யொன்றைத் திருடிய ஜைஜத்ஹுசேன என்பவனுக்கு மாஜிஸ்டிரேட் 15 மாதம் கடுங்காவலும், இரண்டு வருட நன்னடத்தை ஜாமீனும் விதித்தார்.

* *

எகிப்துக்கும் பிரிட்டிஷாருக்கு மேற்பட்ட மனஸ்தாபம் வேறும் முன்னேற்பாடுதானென்றும, வேறு சம்சயப்படக்கூடிய விபரீதமொன்றுமில்லை யென்றும் பிரிட்டிஷ் செய்தி கூறுகிறது.

* *

பீர்ஜ் என்ற விடத்தில் கொள்ளைக்காரர்கள் ரயில் வண்டியில் புகுந்து ஒரு பெண் அணிந்திருந்த 1200 ரூபாய் நகைகளைக் கழற்றிக்கொண்டு சென்றனர். பிரயாணிகள் தடுத்ததில் கம்படி கிடைத்ததுதான் லாபம்.

* *

அகில இந்திய பிராமண மகாநாடு தென்னிந்தியப் பிராமணர்களுக்கு மட்டுமன்றி சௌராஷ்ட்ர பிராமணர்களையும அதில் நுழைக்க வேண்டுமென்ற பிரச்னையைக் காசியிலிருந்து ஒருவர் கிளப்பியிருக்கிறார்.

* *

ஐராவதி நதியைக் கடக்க ஸாகேங்கில கூடிய சீக்கிரம் மீட்டர் கேஜ்பாலமொன்று கட்ட இந்தியா கவர்ன்மெண்டார் 155 லக்ஷம் ரூபாய்க்கு மதிப்புத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

* *

கல்கத்தாவைச் சேர்ந்த டம்டமில் ஒரு ஐரோப்பிய ஸ்திரீயை ஷேக் அமீர் என்பவர் தாக்கி சொத்துக்களைக் கவர்ந்ததோடன்றி கற்பழித்ததாகவும் கொண்டுவரப்பட்ட கேஸில் எதிரி செஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்.

* *

நாட்டில் காலரா அதிகமாகப் பரவவிடாது தடுக்க வேண்டுமாயின் அம்மை குத்திக் கொள்ள வேண்டுமென டாக்டர் பென்ட்லி கல்கத்தாவில் கூறுகிறார்.

* *

பம்பாய் ஒய். எம். ஸி. ஏ. யைச் சேர்ந்த மூன்று பார்ஸிகள் பைசைக்கிளில் உலக யாத்திரைக்கு 15-10-24-ல் புறப்பட்டு பலுசிஸ்தானம், பர்ஷியா, மெஸபொதேமியா, பாலஸ்தீனம், எகிப்து, இடாலி, ஸ்விட்ஸர்லண்டு, ஆஸ்டிரியா, ஹங்கேரி, ஷீகொஸ்லவேகியா, ஜெர்மனி, ஹாலண்டு, பெல்ஜியம், பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்காட்லந்து, அயர்லாந்து, யுனைடெட் ஸ்டேட்ஸ், ஜப்பான், கொரியா, மஞ்சூரியா, சீனா, இண்டோசீனா, ஸியாம் முதலிய விடங்களுக்குச் சென்றுவிட்டு 30—5—27-ல் இங்கு வந்திருக்கின்றனர்.

---

## ஆரியாவின் வீரமொழி.

விருதுநகர் பிராமணரல்லாதார் வாலிப சங்கத்தின் ஆதரவில் காந்திமைதானத்தில் 7-6-27 மாலை ஒரு பொதுக்கூட்டம் கூடியது. பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் தலைமைவகித்து ஸ்ரீ ஆரியாவை 'நமது தற்காலநிலைமை' என்பதுபற்றிப் பேசும்படி கேட்டுக் கொண்டார். அவர் பேசியதின் சாராம்சமாவது:—

தற்சமயம் இந்தியாவில் இரண்டு கக்ஷிகளிருப்பதாகவும், ஒன்று இந்தியா சுயராஜ்யம் பெற உழைக்கும் கக்ஷி, மற்றொன்று அதற்கு இடையூறாக இருக்கும் கக்ஷி என்றும் சொல்லப்படுகிறது. அதாவது பிராமணர்கள் சுயராஜ்யத்துக்காக பாடுபடுபவர்களென்றும், பிராமணரல்லாதார்கள் அதற்கு எதிரிடையாக இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். சுயராஜ்யம் பிராமணர்களைப் பார்க்கிலும் நம்மவர்களுக்கே அவசியம் வேண்டும். எனெனில், ஜனத்தொகையில் 100-க்கு 97 பேர் பிராமணரல்லாதார்கள். ஆகையால் சுயராஜ்யத்தில் ஏற்படும் நன்மை நமக்குத்தான் அதிகம். ஆனால் சுயராஜ்யம் அடைவதற்கு முன் ஒரு ஜாதியாருக்கு மற்றொரு ஜாதியார் அடிமை என்ற பேதமொழிந்து, எல்லோரும் மனிதர்கள்தான் என்னும் சமத்துவமும் சுயமரியாதையும் எல்லா மனிதருக்கும் உண்டு என்றும் உணரவேண்டுவது முதல்கடமையாகவிருக்கிறது. இதை நாம் உணருமுன் நமக்கு சுயராஜ்யம் வந்தால் எவ்வித பலனும் ஏற்படாததோடு இன்னும் பலவிதக்கொடுமைகள் நமக்கு ஏற்படும். இதை நாம் உணராதபடியும், கல்வியிலும் உத்தியோகங்களிலும் நம்மவர்கள் முற்போக்கடையாதபடியும் பிராமணர்கள் தடைசெய்துகொண்டிருக்கிறார்கள். உத்தியோக சாலைகளிலும் கல்லூரிகளிலும் பார்ப்பனர்கள் பெரிய உத்தியோகத்திலிருப்பதால் நம்மவர்களை இகழ்ந்து மிகக் கொடுமையாக நடத்தி தாழ்மைப்படுத்தி தம்மவர்களுக்கு அநுகூலம் செய்துவருகிறார்கள். நம்மவர்களுக்கு கலவி அவசியமில்லை யென்று போதிக்கப்படுகிறது. பார்ப்பனர், பார்ப்பனரல்லாத கக்ஷி டாக்டர் நாயரால் மட்டும் ஸ்தாபிக்கப்பட்டதல்ல. இதிகாச காலம் தொட்டு இக்கட்சிகளிருந்து வருகின்றன. வசிஷ்டர் பிராமணர்மட்டும் கல்வி கற்கலாமென்று சொன்னார். விஸ்வாமித்திரர் சகல ஜாதியாரும் கல்வி கற்கலாமென்று சொன்னார். இப்படியே பரசுராமர் பார்ப்பனர்மட்டும் கல்வி கற்கலாமென்று சொன்னார். கார்த்தவீரியார்ச்சுனன் சகல ஜாதியாரும் கல்வி கற்கலாமென்று சொன்னார். புத்தர் எல்லாரும் கல்விகற்கலாமென்று சொன்னதற்காக அவரைப் பிராமணர்கள் தேசப்பிரஷ்டம் செய்துவிட்டார்கள். பார்ப்பனர்கள் தாங்கள் கடவுளின் வாயிலிருந்து வந்தவர்களென்றும் தங்களுக்கு ஊழியம் செய்வதற்காகவே மற்ற ஜாதியார்களை கடவுள்மற்ற அவயவங்களிலிருந்து படைத்திருக்கிறாரென்றும் ஒரு ஜாதியார் ஒரு ஜாதியினருக்குத் தாழ்மையாயிருப்பது தான் கடவுளின் கட்டளையென்றும் தங்களுக்கு ஊழியம் செய்தால் மறுபிறப்பில் பிராமணர்களாய்ப் பிறக்கலாமென்றும் ஆதலால் எங்களுக்கு ஊழியம் செய்வதற்கு பயந்து அந்நிய மதம் புகவேண்டாமென்றும் சாஸ்திரம் செய்துவைத்திருக்கிறார்கள். நமது இந்து மதத்திலிருக்கும் ஒரு கீழ் ஜாதியாரைத் தொடவும் அஞ்சுகின்றனர். பிறமதம் புகுந்தபின் அவருடன் புசிக்கவும் அவருக்கு ஊழியம் செய்யவும் தயாராகவிருக்கிறார்கள். தாழ்ந்த வகுப்பினரிடம் ஓட்டுவாங்கும்போது அவர்கள் வீட்டில்போய் மிக இனிமையாகப்பேசி தண்ணீர் ஆகாரம் முதலியவை அருந்தி ஏமாற்றுகின்றனர். சுயராஜ்பத்திற்காக வீரமாகப் பேசுவார்கள். ஜெயில் என்றாலும் கஷ்டம் என்றாலும் ஓடி ஒளிகிறார்கள். இவர்களைச் சேர்ந்தவர்கள்தான் ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யங்கார், ஸ்ரீ சத்தியமூர்த்தி, ரெங்கசாமி ஐயங்கார், ஸ்ரீ எம். கே. ஆச்சாரி இவர்களை நம்பினால் நம்கதி என்னவாகுமென்பதை நீர ஆலோசியுங்கள். மந்திரி பதவியை ஜஸ்டிஸ்கக்ஷியார் கையாடவிடுவார்கள் என்பதற்காக தற்கால மந்திரி கக்ஷிக்கு ஆதரவு கொடுத்து வருவதாகவும். அது காங்கிரஸ் கட்டளைக்கு விரோதமல்லவென்றும் சொல்லுகிறார்கள். பணகால் ராஜா இந்த 3 வருடங்களுக்கு மந்திரி பதவியை தங்கள் கக்ஷியார் ஒப்பக்கொள்வதில்லை யென்று எழுதிக்கொடுக்கச் சம்மதித்தும் சுயராஜ்யக் கக்ஷியார் மந்திரி கக்ஷியை எதிர்க்க சம்மதிக்கவில்லை. சர்க்கார் பணக்காரர்களிடம் தான் கொஞ்சம் வரி வாங்குகிறார்கள். எளியவர்களிடம் வாங்கவில்லை. பார்ப்பனர்கள் பலவிதமான பெயரைச்சொல்லி எளியவர்களை ஏமாற்றி ஏராளமான பொருளை வரியாகக் கொள்ளையடிக்கிறார்கள். பார்ப்பனர்களுக்குக் கொடுப்பதால் நமது மூதாதைகள் மோக்ஷம் அடைகிறார்கள் என்ற மூடநம்பிக்கை இனியாவது ஒழியவேண்டும் என்று பேசி முடித்தார்.

பின், தலைவர் முடிவுரையாக பிராமணர்கள் நம்மவர்களை அடிமையாக்கி வருகிறார்கள். நம்மவர் அவர்களிடம் ஏமாந்து தொண்டுசெய்து வருகிறார்கள். நம்மவர்கள் பல்வேறு கக்ஷிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். பார்ப்பனர்கள் எல்லோரும் ஒற்றுமையாகவிருக்கிறார்கள். நம்மவர் ஒற்றுமையாய் முன்னேற முயற்சிப்பதைக் கண்டு பொறுமைப்படுகிறார்கள்.

ஆகையால் இனியேனும் நம்மவர்கள் விழித்தெழுந்து பல்வேறு கக்ஷிகளைவிட்டு ஒற்றுமையும் முன்னேற்றமும் அடைய வேண்டும் என்று பேசி முடித்தார். பின் காரியதரிசியால் உபந்நியாசகருக்கும் தலைவருக்கும் புஷ்பஹாரம் சூட்டப்பெற்று கூட்டம் கலைந்தது.

---

## தேவை.

டிம்மி சயிஸ் பவர் பிரிண்டிங் மிஷன் பழைய விலைக்குத் தேவை. விலை விபரத்துடன், பத்திராதிபர் "நாடார் குல மித்திரன்" அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு எழுதவும்.

---

## தேவை.

ஒரு எலிமெண்டரி ஹையர்கிரேடு உபாத்தியாயராவது லோயர் கிரேடு உபாத்தியாயராவது தேவை.

அப்ளிக்கேஷன் குளத்தூர் நாடார் ஸ்கூல் மானேஜர் அவர்களுக்கு அனுப்பிக்கொள்ளவும்.

---

## அவசியம் தேவை.

நாகலாபுரத்தை அடுத்த புதூரிலிருக்கும் நாடார்கள்க்ஷத்திரியா வித்யாசாலை தலைமைஉபாத்தியாயர்பதவிக்கு குறைந்தது எலிமெண்டரி ஹையர்கிரேடு ட்ரெயினிங் பாஸ்பண்ணினவராயும் போதுமான இங்கிலீஷ் அறிவுள்ளவராகவும், முப்பது வயதுக்குக் குறையாதவராகவும் ஷையார் மனைவியும் குறைந்தது எலிமெண்டரி ஹையர்கிரேடு ட்ரெயினிங் பாஸ் பண்ணினவர்களாகவும் இருக்கவேண்டியது. இருவருக்கும் வேலையுண்டு. தகுதியுடையோர் தங்கள் நற்சாட்சிப் பத்திரங்களோடு அடியில் கையொப்பமிட்டிருக்கிறவருக்கு உடனே அப்ளிக்கேஷன் எழுதிக்கொள்ளவும். நாடார்குலத்தவராயிருப்பது ரொம்பவும் உசிதம். திறமைக்குத்தக்கபடி சம்பளம் கொடுக்கப்படும்.

வெ. ச. மு. சங்கரலிங்கநாடார்,
ஸ்கூல் மானேஜர்,
புதூர் (Via) எட்டையாபுரம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தலைகனத்த அரசியல்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் பம்பாயில் கூடிச் செய்த தீர்மானங்களில் பம்பாய் மாகாணத்திலிருந்து சிந்து மாகாணத்தை தனி மாகாணமாகச் செய்துவிட வேண்டியதென்ற விஷயம் வந்தபோது முன்னமே காங்கிரஸ் மகாசபை பாஷைவாரியாக மாகாணப் பிரிவினை செய்வதற்கு விரோதமான காரியமல்லவென்று ஒப்புக்கொண்டது மொன்றாகும்.

காங்கிரஸ் மகாசபை யேற்பட்ட பிறகே நாட்டில் பலவித வரிகளும் உத்தியோகங்களும் அதிகப்பட்டு வறுமை செழித்து வளருகிறதென்று "குடி அரசு" பத்திராதிபர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் பல விடங்களிலும் வெளியிடும் அபிப்பிராயங்களைக் கண்டு "சுதேச மித்திரன்", "தமிழ்நாடு" முதலிய பத்திரிகைகள் திரு. நாயக்கரைக் கண்டித்துப் பல குறிப்புகள் எழுதியிருக்கின்றன. காங்கிரஸ் தலைவராகிய திரு. ஸ்ரீநிவாசய்யங்கார், திரு. அ. ரெங்கசாமி அய்யங்கார், திரு. எஸ். சத்தியமூர்த்தி அய்யர் முதலியவர்கள் பல கூட்டங்களில் திரு. நாயக்கரைக் காங்கிரஸ் துரோகி என்றும், தேச சபையையே கெடுக்கத் தொடங்கியவர் என்னும் பொருளுள்ள பதங்களை உச்சரித்துத் தூற்றி வந்திருக்கிறார்கள். இவ்வித வெளியீடுகளைப் பத்திரிகைகளில் வாசித்தோர் சிலர் நாயக்கரைக் கண்டிக்கவும் முன்பட்டுவிடுகின்றனர். ஆனால் உண்மை யென்ன வென்பதை நடுநிலைமையிலுள்ள ஒவ்வொருவரும் துருவி ஆராய வேண்டியது அவசியமாயிருக்கிறது.

இந்தியன் நேஷனல் காங்கிரஸை முதலில் ஆரம்பிப்பதற்குக் காரணமாயிருந்த ஸர். வில்லியம், வெட்டர்பர்ன் முதலிய இந்திய அபிமானமுள்ள ஆங்கிலேயர்களும், அக்காலமிருந்த இந்தியத் தலைவர்களும், பிரிட்டிஷ் இந்தியாவில் இந்தியர்களை சரிசமமான உரிமையோடு ஆள வேண்டுமென்றும், இந்தியர்களுக்கும் பங்கு வேண்டுமென்றும் கேட்டு உரிமை பெருமை பெறுவதற்காகவும், இந்தியர்களுக்கு வேண்டிய இதர தேவைகளைப் பூர்த்தி செய்துவைக்கும்படி கோருவதற்காகவுமே காங்கிரஸ் மஹாசபையை அமைத்தார்களென்பதையும், அவ்வேலையையே வெகு நாள்வரை செய்து வந்த தேசபக்த சிகாமணியாகிய தாதாபாய் நௌரோஜியின் தலைமையின்கீழ் கூடிய காங்கிரஸில்தான் சுயராஜ்யம் என்னும் பதம் பிரயோகப்பட்டதென்பதும் பிரத்தியட்சமான காரியங்கள். ஆயினும் பிற்பாடும் சில வருஷங்கள்வரை காங்கிரஸில் சேருவோர் தாங்கள் பெரிய உத்தியோகங்கள் பெறும் நோக்கத்துடன் காங்கிரஸ் மேடைகளில் வந்து பிரசங்கம் புரிவதும் வெளிக் கூட்டங்களில் காங்கிரஸின் சார்பாய் பல கூட்டங்களைக் கூட்டி உத்தியோகத்தில் இந்தியர்களுக்கும் சம உரிமை வேணுமென்று தீர்மானித்து கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்துவதும், அதன் மூலம் உத்தியோகம் பெறுவதும் மிகவும் சகஜமாகவே நடந்துவந்தது. நமது மாகாணத்தில் இவ்விதம் பிரபலப்படுத்தி உத்தியோகம் பெற்றவர்களில் காலஞ்சென்ற திரு. வி. கிருஷ்ணசாமி அய்யர், திரு. பி. ஆர். சுந்தரய்யர் முதலானவர்களும் இப்போதுள்ள சட்ட மெம்பர் திரு. ஸி. பி. ராமசாமி அய்யர் போன்றவர்களும் முக்கியஸ்தர்கள். ஆனால் இவர்களெல்லாம் திறமையில் குறைந்தவர்களென்று நாம் சொல்ல வரவில்லையாயினும் காங்கிரஸ் என்னும் ஏணியானது உத்தியோக ஆசையுள்ளவர்கள் ஏறிச் செல்ல உதவியாக இருந்ததென்பதைத் தெரிந்துகொள்வதற்காகவே யெழுதுகிறோம்.

மகாத்மா காந்தியடிகள் காங்கிரஸில் வந்து ஒத்துழையாமைப் போருக்கு காங்கிரஸைக் கைவசப்படுத்திய காலங்களில் தான் கவர்ன்மெண்டிடம் வேண்டுகோள் செய்யுந் தீர்மானங்கள் குறைந்து, தேச மக்களை சுயராஜ்யமென்னும் மலையுச்சியை யடையச் செய்யுஞ் சாதனமாகக் காங்கிரஸ் ஏணியை சகலரும் உபயோகித்தார்கள். உத்தியோக ஆசையும் யார் எக்கேடு கெட்டாலும் தங்கள் பையை நிரப்பிக்கொள்வதில் வல்லமையுடைய வக்கீல்களின் கூட்டமும் அதுகாலை காங்கிரஸிலிருந்து மிக மிகக் குறைந்துவிட்டது. வக்கீல்களுக்கும் தாங்கள் இந்திய சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கக்கூடிய நிலைமை வந்ததே; இதை எவ்விதம் மாற்றுவோம் என்ற ஏக்கம் வந்து சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வங்க நாட்டின் உண்மைப் புத்திரராகிய ஸி. ஆர். தாஸ் அவர்கள் மகாத்மா சிறைக் கூடஞ் சென்றவுடன் அவர் கொள்கையை நடத்திவைக்க முடியாததாலும், நிர்மாணத் திட்டத்தை நடத்திவைப்பதில் தமக்குப் பற்றில்லாததாலும், காங்கிரஸ் சபையிலேயே சுயராஜ்யக் கட்சியென்று ஒரு கட்சியை யுண்டாக்க முற்பட்டார். பதவி வேட்கையுடையோரும் தேச பக்தர்கள்போல் நடித்த பொய் வேடதாரிகளும் சமயத்தைக் கைவிடாமல் திரு. ஸி. ஆர். தாஸ் அவர்களை இந்திய நாட்டில் பிரதட்சிணஞ் செய்துவைத்து தாங்களுங்கூடவே யிருந்து கோலிந்தாப்போட்டு ஒத்துழையாக் காங்கிரஸை ஒத்துழைப்புச் சேற்றில் அமிழ்த்தி பழைய கருப்பனே கருப்பன் என்ற நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். அதன் மூலமாகவே தேசத்தில் தேர்தல் போராட்டங்களும், அதற்காக லட்சம் லட்சமாக பணச் செலவும், எவ்வளவு பெரிய பதவியிலுள்ளவர்களும் சமையத்துக்குத் தக்கபடி பொய் சொல்லவும், அற்பக் காரணங்களையும் பிரமாதப்படுத்தி தேர்தல் ஆக்ஷேபனைகளுக்காகக் கோர்ட்டுக்குப் போவதுமாகி தேச மக்களின் நன்னடக்கைக்கே மாசுண்டாக்கிவிட்டது.

இவ்வித காரியங்களோடல்லாமல் காங்கிரஸ் மஹாசபையானது சீர்திருத்தம் சீர்திருத்தமென்று பல திட்டங்களை வெளியிட்டு இவைகளை அவசியம் செய்து தீரவேணுமென்று தீர்மானிப்பதும், கவர்ன்மெண்டும் அதற்கு செவி சாய்ப்பதுபோல் பாவனை செய்து சீர்திருத்தம் வழங்குவதும், அதன் பயனாய் பல உத்தியோகங்கள் புதிது புதிதாய்ச் சிருஷ்டிக்கப்படுவதும், அவ்வழிச் செலவுக்காக தேச மக்களின் மீது புதிதும் அதிகமுமான வரிகள் விதிக்கப்படுவதும் நாம் தினமும் அநுபவித்துவரும் உண்மைகள். ஒரு உதாரணஞ் சொல்லுகிறோம். சென்னை மாகாணத்தை நிர்வகித்து வருவதற்கு மாண்டேகு, சேம்ஸ்போர்டு சீர்திருத்தத்திற்குமுன் கவர்னரும், மூன்று நிர்வாக சபை மெம்பரும், அவர்களுடைய சிப்பந்திகளும் இருந்து நடத்திவந்தார்கள். இப்பொழுதோ, கவர்னர் 1, நிர்வாகசபை மெம்பர் 3, மந்திரிமார்கள் 3 பேர் ஆக ஏழு பேர்களும் அவர்களுக்கு வேண்டிய சிப்பந்திகளும் இருந்து நடத்துகிறார்கள். சீர்திருத்தத்தின் பலன் மூன்று மந்திரிகளும், அவர்களுக்கு வேண்டிய சிப்பந்திகளும் அதிகப்பட்டு அவர்கள் சம்பளத்துக்கு வேண்டிய பணம் தேச மக்களின் ரத்தம் வற்றிப் போகும்படி நெருக்கி வடிகட்டி வருவிக்கப்படுகிறது. வேறென்ன சுகங் கண்டோம்? ஜனங்களுக்குள் சிலருக்கு ஓட்டுச் சுதந்திரங் கிடைத்திருக்கிறதென்று காங்கிரஸ் ஊழியர்கள் சொல்லலாம். கல்வியில்லாதபோது ஓட்டுச் சுதந்திரமிருந்து பிரயோசனமென்ன?

போதாக் குறைக்கு பம்பாயிலிருந்து சிந்து மாகாணத்தைப் பிரித்துத் தனி மாகாணமாக்க அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சம்மதித்திருப்பதும், காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் சென்னையையும் தமிழ், தெலுங்கு என்று இரண்டு மாகாணங்களாக்கிவிட வேண்டுமென்று அபிப்பிராயம் வெளியிட்டிருப்பதும் புதிய இரண்டு மாகாணங்களுக்கும் இரண்டு கவர்னர்களும், அதிகமான நிர்வாக சபை மெம்பர்களும், இரு சட்டசபைகளும், இன்னும் பல நூதன உத்தியோகங்களும் அதிகப்படும்படி செய்து ஜனங்கள் தலையில் வரிச் சுமையைச் சுமத்தி, என்றும் தலை தூக்கவிடாமல் செய்துவிடுமென்ற எச்சரிக்கை செய்கின்றோம். இவைகளைத்தான் தலை கனத்த அரசியல் என்று நாம் சொல்லுகிறோம். காங்கிரஸ் மகாசபை தேச மக்களின் சபையல்லவென்றும், உத்தியோகம் விரும்பும் ஆசாமிகள் கூடி சதியாலோசனை செய்யுங்கூட்டமென்றும் ஸ்ரீமான் நாயக்கரவர்கள் சொல்லுவதற்கும் காரணமில்லாமல் போகவில்லை. தேச விடுதலையை விரும்பும் தேச மக்கள் இவ்வித போலி அரசியல் திருத்தங்களைக் கடிந்து தங்கள் கருத்தை வெளியிடும்படி வேண்டுகிறோம். இந்தியர் விரும்புவது சம சுதந்திரமும், சுயமரியாதையுமுள்ள சுயராஜ்யமே யன்றி வேறு எவ்வித வெறும் போலிசுயராஜ்யமுமல்லவென்று அறிவித்துக்கொள்ளுகிறோம்.

அரசியல் வாதி.

---

## பெண்மை.

(ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களின் பிரசங்கம்)

பெண்மையின் நன்மையை உணர்ந்தால் அதனிடத்துள்ள மேன்மை விளங்கும் பெண்மை பண்புப்பொருள் ஆகும். அதனைக் கண்ணால் காண முடியாது; கையால் தொட முடியாது. மனத்தால்தான் உணரலாம். பெண்மை என்றால் அமைதி என்றப் பொருள் தொனிக்கும். அழுக்காறு அவா வெகுளியில்லா உள்ளமே அமைதியான உள்ளம் ஆகும். அந்த உள்ளம் இருந்தாலன்றி, இந்தப் பெண்மைக்குணம் இருந்தாலன்றி ஆண்டவனைக் காண முடியாது. திருமூலர் சிவகாமியாகும் சருணமிது என்ற பாட்டினால் இக்கருத்தை விளக்கியிருக்கிறார். நம் மாழ்வாரும் இப்படியே பாடியிருக்கிறார். உலகத்தை நடத்தும் சிவபெருமானுக்கு வெம்மை தண்மை என்ற இரு குணங்கள் உண்டு. வெம்மை ஆண்மைக் குணம்; தண்மை பெண்மைக்குணமாகும். இவை இரண்டும் ஒரே இடத்தில் இருக்கின்றன. இக்குணங்கள் ஒன்றைவிட்டு மற்றொன்று பிரியா. ஆண்மைக்குணம் உலகத்தைப் பிரித்துக்கொண்டே போகின்றது. பெண்மைக் குணம் அதனைக் கூட்டிக்கொண்டே போகின்றது. இக்குணங்களை சிவம் என்றும் சக்தி என்றும் சொல்வார்கள். இடகலை, பிங்கலை என்று சொல்வதும் உண்டு. செம்மை என்றும் நீலம் என்றும் விளிப்பதுண்டு. இக்குணங்கள் நீரிலும் நெருப்பிலும் அமைந்திருக்கின்றன. சணல் எரியும் போதுந்தான் நாம் நீல ஒளியே சக்தி ஒளியாகும். இந்த நீலம் கண்ணுக்கும் மனத்திற்கும் இன்பம் தரத்தக்கது. இந்த சக்தி உடலையும் உயிரையும் வளர்க்கும் சக்தி. உடலிலே ஆண்நாடியும் பெண்நாடியும் சமமாக இருத்தல் வேண்டும். ஒன்று ஏறினாலும் மற்றொன்று இறங்கினாலும் உடல் இயங்காது. எனவே படைப்பில் எல்லாம் ஆண் பெண் மயமாக அமைக்கப்பெற்றிருக்கிறது. இதனில் ஆண் அமைப்பு முன்னதா என்று சொல்லுதல் கஷ்டம். என் அபிப்பிராயம் பெண்படைப்பு முந்தியது என்பது. பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது என திருமூலர் அருளியிருக்கிறார். பெண்மைச்சக்தி சிறந்ததென்பதை நாம் உணரவேண்டும். ஆண் அழுக்காறு சினம் முதலியன நிரம்பியதாக இருக்கிறது. பெண்மையோ அன்பு அருள் இரக்கம் உடையதாக இருக்கிறது. தாய்மை என்பதைப் பற்றி சற்று கவனிப்போம். ஆன்மாக்கள் இருட்டில் கிடந்துழல்வதினின்றும் கடவுள் வெளிப்படுத்தி அவைகளுக்கு புவன போகங்களைத் தருகின்றார். அந்தப்படைப்பு வேலையை தாயாம் பெண்மக்கள் பால் கடவுள் அருளியிருக்கின்றார். பெண்கள் தாய்மார்களாக உலகுக்குச் செய்யும் பணி பொன்னேபோல் போற்றத்தக்கன. வாய்மை, வீரம் உடையமக்களை உலகுக்கு உதவுதல் தாய்மாரன்றோ? மக்களைவளர்த்துப் பாராட்டி சீராட்டுதலில் பெண்கள்படும் துயரம் செப்புதல் எளிதோ? இத்தனை துயரத்தையும் பற்று, தம்சுகத்தைக்கவனியாது பிள்ளைகளின் நலத்தைக் கவனித்துத் தொண்டு புரியும் பெண்மக்களைத் தெய்வம் என்று போற்றலாமையா? படைப்புத் தொழிலில் கடவுளுக்கு உதவியாயிருக்கும் தாய்மாரைத் தெய்வமாகப் பேணுதல் மக்கள் கடமையாகும். தாய் பேணாதவன் கீழ் மகனாவன். இங்ஙனம் மகளாகவும் பிறகு ஒருவனுக்கு நாயகியாகவும் தாயாகவும் தெய்வமாகவும் ஆகின்ற பெண்மக்களை நாம் கவனமாகக் காத்தல்வேண்டும். அவர்களின் செழுமையும் உடல் நலனும் தேசத்தின் பொருளாகும். அவர் அமைதியாகவாழ்தல் தேசம் அமைதியாக வாழ்வதாக ஆகும். சிறு போழ்தில் பெண்மக்களுக்கு நல்ல ஆகாரம் கொடுத்தல்வேண்டும். அவர்களின் உள்ளம் உறுப்பு உடல் கருநலன் முதலியன நல்ல நிலைமையில் இருத்தல் அவசியமாதலாலே வெம்மை தரத்தக்க ஆகாரம் கொடுத்தல் கூடாது. தேயிலை கொக்கோ காபி முதலிய பானங்கள் வெம்மைதரவல்லன வாதலின் இவற்றைப் பருகும் பெண்மக்கள் உடல் நலனிழந்து மலச்சிக்கல் காசம் முதலிய நோயக்காளாகின்றனர். நோய்களுக்காளாகும் பெண்மக்கள் பால் நோயுற்றமக்களே தோன்றுகின்றனர். எனவே பெண்மக்களின் ஆகாரம் முதலியவற்றைப் பாகுபடுத்தி நல்ல ஆகாரம் சுத்தமான காற்று சூரிய ஒளி முதலியன கிடைக்குமாறு செய்தல்வேண்டும். அவர்களை ஆண்மக்கள் அன்பாக நடத்தல்வேண்டும். பெண்களை இன்பப்பொருளாகவும் மக்களைப் பெறும் பெட்டகமாகவும் நினைத்தல் கூடாது, கூடாது. பெண்ணின் தெய்வீக குணத்தைப் போற்றினாலன்றி ஆண்மக்கள் உய்யமுடியாது. பெண்மக்கள் பெருமையை உணர்ந்தால் அசுரகுணம்போம்; அருட்குணம் பெருகும். பெண் பிறந்தால் இந்தக் குடும்பங்களில் ஏதோ இடிவிழுந்தது போல் வெருளுகின்றனர்; அறியாமை! இப்படி இழிவு படுத்தும் வழக்கம் என்று தோன்றிற்றோ? பெண்பிறந்தால் தெய்வம் பிறந்ததென இன்பக் கடலில் ஆழ்தல் வேண்டும். இப்படி எண்ணுங்காலம்தான் நாம் உய்யுங்காலம். பெண்களைத் தாழ்த்தினோம். மொழி தாழ்ந்தது; தேசம் தாழ்ந்தது; சமயம் தாழ்ந்தது; பெண்களைப் பேயென்றோம்; நாயென்றோம்; மாயையென்றோம். அதன் பலனை நாம் அனுபவிக்கின்றோம். நல்ல தண்டனை நமக்குக் கிடைத்திருக்கிறது. ஒருவன் ஒருத்தியோடும் ஒருத்தி ஒருவனோடும் வாழும் வழக்கத்தை நாம் கைக்கொள்ளல் வேண்டும். ஆண்களும் பெண்களும் நல்ல உடல் வலிமைபெற்ற பிறகு அதாவது ஆணுக்கு 20 வயதிலும் பெண்ணுக்கு 16 வயதிலும் மணம் முடித்தல்வேண்டும். இதற்கு முன்னர் மணம் முடித்தல் கூடாது. பிள்ளைப் பேற்றுக்காகவே கணவன் மனைவியோடுகலந்து வாழ்ந்து ஆண் 35 வயதுக்குப் பிறகு வானப்பிரஸ்த ஆச்ரமத்தை அனுஷ்டிக்க வேண்டும். இதன் பின்னர் மனைவியை ஒருவன் இன்பப்பொருளாகவே எண்ணுதல் கூடாது. இங்ஙனம் பழைய வாழ்க்கையை நாம் புதுப்பித்தால்தான் உய்யலாம். இன்றேல் இன்னும் கீழே போய்விடுவோம். பெண்மக்கள் நெறிதவறிப் போகின்றனரே என்றால் அதற்குக் காரணம் ஆண் மக்கள் தான். அவர்களை இயற்கையில் வளர்க்காததும் அவர்களுக்கு இயற்கை உணவுகளை அளிக்காததுந்தான் காரணம். எனவே பெண்களைத் தாயாகவும் தெய்வமாகவும் போற்றி அவர்களுக்கு ஏற்றகல்வி, ஏற்ற ஆகாரம் நல்கி அவர்களை இழிவாக நினைக்கும் வழக்கத்தை அகற்றிஉய்யும் வழியை பாரத மக்கள் தேடல்வேண்டும்.

---

## உயிர்ச் சேதம்.

விருதுநகர் தென்காசிரயில்வே லயனிலுள்ள பார்புக்கோயில்சந்தைபக்கத்தில் 22-5-27ல் கூலியாட்கள் டிரக்கிலிருந்து மண் தள்ளிக்கொண்டிருக்கும் சமயம் அடித்த பலமான காற்றினால் வண்டி தானகப் புறப்பட்டுவிட இருவர் தவிர ஏனையோர் தரையில் குதித்துவிட்டனர். பின் இந்த வண்டி போய் இன்னொருவண்டியில் பலமாய்த் தாக்கவே இருவரில் ஒருவர் தவறி விழுந்து மாண்டனராம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சுத்தமே பரிசுத்தவித்து.

தேக சுத்தமானது நித்தியவாழ்விற்கு ஒத்ததாகிய பரிசுத்தத்திற்கு ஏற்ற வித்தாகவிருக்கின்றது. ஆகவே, இகபர விஷயமாய் சுகத்த ஜீவிகளாய் வாழவேண்டுமாயின், சுத்தம் இன்றியமையாததே. இதுபற்றியே சுத்தம் சோறளிக்கும் என்ற முதுமொழியும் வழங்குகின்றது. இவ்வுலகம் சுத்தமாய் நடப்பவனை நேசிப்பதும் அசுத்த ஜீவிகளை பகைப்பதும் சகஜமன்றோ? இதினால் நாம் ஒவ்வொருவரும் சுகஜீவிகளாய் வாழ ஆசிப்போமல்லவோ? இதற்கு வேண்டிய விதிகளில் சிலவற்றை ஈண்டு பகர்கின்றனன். இவ்விதிகள் பெரும்பாலும் நாம் அறிந்தவையாயினும், நினைப்பூட்டுதலின் பொருட்டாகவும் உடனே கையாளுவதின் நிமித்தமாகவுமே அறிவிக்கப்படுகின்றன.

1. தேகம் முழுமையும் தினம் ஒரு தடவையாவது நன்றாய் சுத்தஞ் செய்ய வேண்டும். இவ்வழக்கம் நமது சுகநிலைக்கு மாத்திரமன்றி, பிறர் தருமத்தைப் பெறுவதற்கும் ஏற்றது. பிறர் நம்மை அரோசமின்றி நெருங்குவர். சுத்தமற்ற பிள்ளைகள் சந்தோஷமற்ற ரோகிகளாவர். காது, கை, நகம், விசேஷமாய் கால் இவற்றை நன்றாய் சுத்தஞ் செய்யவேண்டும். கைகளும் முகமும் தினமும் சாதாரண ஸோப்பு உபயோகித்து சுத்தஞ்செய்யவேண்டும். நகத்தைச் சுத்தஞ் செய்யச் சிறிய தும்புபிரஷ் ஒன்று வைத்திருப்பது நலம்.

2. நமது பற்களை காலை, மாலை, ஆகாரத்தின் பின் இவ்வேளைகளில் நன்றாய் சுத்திசெய்து வரவும். போஜனம் அருந்திய பின்னர் கைகளை நன்றாய்க் கழுவாவிடில் பலவகையான தோல் வியாதிகள் ஏற்படக்கூடும். வெளியிலிருந்து வந்தவுடன் கால்களை நன்றாய்க் கழுவவேண்டும்.

3. தலைமயிர் அழுக்கின்றி சுத்தமாயும் ஒழுங்கான விதமாய் வெட்டப்பட்டதாயுமிருக்கவேண்டும். படுக்கையினின்று எழுந்து வெளியேறுவதின் முன் இவ்வேலை முடிந்திருக்க வேண்டும். தலைசீவுவது வீண் பெருமையென்றும், பறந்தலையாயிருப்பது பதிவிரதாத்தனத்திற்கு ஏற்றதென்றும் நினைப்பது சுத்தப் பேதமையாகும்.

4. நமது உடைகள் சுத்தமானதாயும் ஏற்றதாயுமிருக்கவேண்டும். நிறம் வெண்மையாய் இருப்பது மிகவும் நன்று. வெள்ளை பார்வைக்கு அழகானது; சுகத்துக்கு ஆதாரமானது; உஷ்ணத்தை அகற்றக்கூடியது. விலையுயர்ந்த அசுத்த உடைகளைவிட விலையாத சுத்த உடைகளே ஏற்றவை. கந்தையானாலும் கசக்கிக்கட்டு.

5. தினந்தோறும் ஒழுங்காய் தேகாப்பியாசஞ் செய்யவேண்டும். மாணவர்கள் பாடசாலை விளையாட்டுகளில் சந்தோஷமாய்ச் சேரவேண்டும். சக்கூலில் ஒளிந்திருந்து அதின் சுகந்த வாசனையைக் குடிக்கச் செல்வாரீர்கள், தேகாப்பியாசம் செய்யுத்தவறினால் அதிகாலையில் இரண்டு அல்லது மூன்று மைல் தூரிதமாய் நடக்கவேண்டும். வாலிபர்கள் அதிகாலையில் சராசரி 50 தசரத்துக்களாவது செய்வது நல்லது. தசரத்துக்களின் எண்ணிக்கையை படிப்படியாய்க் கூட்டுவதே உசிதம். நன்றாய்க் களைத்துப் போகும் வரையில் அப்பியாசிக்கவேண்டும். தேகாப்பியாசம் ஆண்களுக்கேயன்றி பெண்களுக்குரியதல்லவென்று பெண்கள் நினைப்பது மதியீனம் என்றும் எப்போதும் அடுப்பூதும் மங்கைகளாயிருக்கும் எங்களுக்கும் தேகாப்பியாசமும், காற்றிற்காக உலாவப்போதலும் தகுமோ? இது பெரும் கேவலமல்லவா? மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்றும் எண்ணும் பெண்களின் பேதமைக்குணத்தை என்னென்றியம்புவது! ஐரோப்பிய பெண்களை இவ்விஷயத்தில் கண்டு பாவித்து சுகஜீவிகளாய் வாழ அன்னவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். சந்ததம் பேரிருக்கும் அறையினின்று

## மனோ ரஞ்சிதம்.

(௨)

உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு தேசப் பயிற்சியு மவசியமே. சிலம்பம் தேகப்பயிற்சியில் சிறந்தது. சிலம்பு விளையாடுவோன் கெட்டவனென்பது கெட்ட அபிப்பிராயமே. கெட்டமதுக் குடியினாலேயே சிலம்புக்கு கெட்ட பெயர் ஏற்பட்டதென்பது மிகையாகாது. ஜெயமடைப் புகைவர்களான கெட்ட சேர்க்கையும், மதுக்குடியும் மடிந்தால் சிலம்பம்போல் சிறந்ததொன்றில்லையெனத் தைரியமாய்க் கூறலாம்.

* *

சிரித்துப் பேசுவோர்களெல்லாம் சிநேகிதர்களாகிவிட மாட்டார்கள். கண்டித்துப் பேசுவோர்களெல்லாம் பகைவர்களாகிவிட மாட்டார்கள். நகைப்பில் நஞ்சுமுண்டு; கண்டிப்பில் கஞ்சியுமுண்டு.

* *

தடியினலடிப்பதினால் பழம் பழுப்பதில்லை; பலவந்தத்தினால் அன்பு புஷ்பிப்பதில்லை; பலவந்தத்திற்கும் அன்புக்கும் உள்ள சம்பந்தம் எதுபோலென்றால் நெருப்புக்கும், தண்ணீர்க்குமுள்ள தன்மையையே யொக்கும்.

* *

மனிதன் நாகரீகமடைந்து முன்னேற ஏற அபிப்பிராய பேதங்களும் மலிந்து மலியுமென்பது வெளிப்படை. நெருப்போடு புகையுமுண்டாவது போல பகுத்தறிவிருக்கும் வரை அபிப்பிராய பேதமுமிராது.

* *

அபிப்பிராய ஒற்றுமையால் பழைய பகைகள் பூனை கண்ட எலி யெனப் பதுங்கி மறையவும் செய்கிறது; அபிப்பிராய வேற்றுமையால் பழைய கேண்மையும் கிரி கண்ட பாம்புபோலுயிருக்கிறது.

* *

ஒரு ரூபாய் சம்பாதிக்கும் நேரத்தில் ஆயிரம் ரூபாய் செலவு செய்வது அவ்வளவு கஷ்டமில்லை; ஆயிரம் ரூபாய் செலவு செய்வதைக்காட்டிலும் ஒரு ரூபாயை அடைவதே கஷ்டமானது. வரவு எட்டைப்பார்க்கிலும் செலவு எடு சிறிதாயிருப்பது நலம்.

* *

எஜமானன் யோசனை கேட்கும்படியான வேலைக்காரனுமுண்டு; எஜமானனை யோசனை கேட்கும் வேலைக்காரனுமுண்டு; இவைகள் போன்றவைகளே சம்பள வித்தியாசங்களுக்குக் காரணம்.

அ. கு. அண்ணாமலை நாடார்.

---

உடன் வெளியேற வேண்டும். மேகம், மரம், புஷ்பங்கள், புழு, பூச்சி இவை போன்றவற்றின் இயற்கை அழகின் மேல் மனதை ஊன்றி உற்று நோக்கும் சக்தியை விருத்தி செய்யவேண்டும். இவ்வழிகளால் மனதைச் சரியான நிலையில் ஆக்கலாம். சுக மனம் சுகத்தை விருத்தி செய்யும்.

6. போஜனங்களின் இடை சமயங்களில் சாப்பிடவோ குடிக்கவோவேண்டாம், தாகம் ஏற்படுமானால் வாயை கழுவிக்கொள்வது போதுமானது, மறு போஜனம் வரும்வரையில் காத்திருப்பாயாகில் அவ்வாகாரம் ருசிகரமாயிருக்கும். சாப்பாட்டிற்குக் குறிப்பிட்ட சமயங்கள் ஏற்படவேண்டும், ஒவ்வொரு போஜனத்திற்கு மிடையில் குறைந்தது 5 மணிக்கூறாவது வேண்டும், அதாவது ஆகார ஜீரணத்திற்கு மூன்று மணிக்கூறும், இளைப்பாறுதலுக்கு 2 மணிக்கூறுமாம், இம்முறையை அனுசரிப்பவரே நெடுநாள் ஜீவிப்பார். ஜீரணக் கருவிகளுக்குத் தகாத ஜோலி கொடுப்பவர் அதிசீக்கிரத்தில் மூன்றாவது காலை விரும்புவர்.

## தமாஷ் பேச்சு.

உபாத்தியாயர்:—முனியா! அந்தக் கட்டையை எடுத்துக்கொண்டு வா.

முனியன்:— இதோ, எடுத்துக் கொண்டு வருகிறேன். ஸார். ஸார் அது லைட்டாகவிருக்கிறது.

ராமன்:—ஸார்! முனியன் கொஞ்சங்கூடப் பயமில்லாமல் கட்டையை லைட் என்கிறான் ஸார். கட்டை வெளிச்சமாகவா விருக்கிறது?

உபாத்தியாயர்:—ராமா! லைட் என்றால் ஆங்கிலத்தில் வெளிச்சம் என்றும், இலேசானது என்றும் பொருள் உண்டு.

ராமன்:—ஸார்! லைட் என்றால் விளக்கு என்றும் சொல்லுகிறார்கள்.

உபாத்தியாயர்:— ராமா நீ எப்பொழுதும் வேடிக்கையாகவே பேசுகிறாய்.

---

பையன்:—ஐயா! உப்பு மா இருக்கிறதா?

வியாபாரி:— இது என்ன காப்பிக் கிளப் என்று பார்த்தீர்?

பையன்:— என்னையா! உங்கள் கடையில் உப்பும், மாவும் கிடையாதோ?

---

அண்ணன்:— நீ கடலை சாப்பிட்டிருக்கிறாயா?

தம்பி:—ஆம் அண்ணா, நான் நேற்றுக் கூட 3 பைசாவுக்கு வாங்கிச் சாப்பிட்டேன்.

அண்ணன்:— அகஸ்தியர் சாப்பிட்ட கடலைச் சாப்பிட்டாயா என்றேன்.

சிவ. கு. சிவசுப்பிரமணியன்.

---

மடகாஸ்கர் தீவில் துணிகள் நெய்வதற்கு பட்டை மாத்திரமே உபயோகிக்கிறார்களாம். ஏனெனில் பஞ்சு முதலியவைகளை விடப்பட்டுத்தான் அங்கு வெகு நயமாகக் கிடைக்கிறதாம்.

* *

அதிகமாய்க்கொழுத்திருக்கிறவர்கள் இளைக்க வேண்டுமானால் சேர்ந்தாப்போல் இரண்டு இரவு தூங்காதிருக்க வேண்டுமாம். ஜனங்கள் இளைப்பதற்கு இரண்டு வாரமாயினும் பட்டினி கிடப்பார்களேயன்றி இச்சுலபமான வழியை அனுசரிப்பதிகிடையாது, ஒருவன் நன்றாய் ஆகாரத்தை உட்கொண்டு விட்டு தூங்காது மாத்திரம் இருப்பானாகில் பட்டினி கிடப்பதைவிட இரண்டு பங்கு சதை குறையுமாம்.

## தாய் மார்கள் கவனிக்க வேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி, சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால்வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய், ஜெபித்து வி. பி. செய்யப்பட்டு வருகிறது. 20 வருடத்து அனுபவம். எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும். இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு, விஷயத்திற்கும், தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

ஏ. எஸ். ஏ. மாந்திரீக டாக்டர்,
இனாம்தார் வீடு,
சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம்,
திருச்சி.

## போட்டோ காமிரா.



இது புதிதாக லண்டன் மாநகரில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் போட்டோகிராப் படங்கள் பிடிக்க சிறு பிள்ளைகளும் எளிதில் கற்றுக் கொள்வதற்கு ஏற்பத் தயார் செய்யப்பட்டது. கற்றுக்கொண்டு மாதம் ரூ 50 முதல் 500 வரை சம்பாதிக்கலாம். புகைப்படம் பிடிக்கும் ரகசியங்கள் காமிராவுடன் சேர்த்து அனுப்பப்படும். விலை ரூ 3—8—0.

(ரூபாய் மூன்று அணா எட்டு)

கிடைக்குமிடம்:—HART & Co
Coimbatore, (S. India)

## தமிழ் புக்கீப்பிங்

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை புன்கு போதிப்பது, ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களும் அடங்கியிருக்கின்றன. அனேக வியாபார இரகசியங்களையுமுடையது வியாபாரிகள். மாணாக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்

தே. ஆறுமுகஞ் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

## புத்திர சந்தான எண்ணெய்



ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது விந்துவைப் புசித்து வருவதினாலும் மற்றும் பல காரணத்தினாலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரி பற்றி இரத்தங்கட்டியிருந்தாலும் சூலகச் சுழியில் வாய்வு பித்தம் தங்கினாலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது, இப்படி 15-நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் அநேகவித குற்றங்களையும் நீக்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருத்தரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவதுமுண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ 3.

சேட்லுக் இனும்.

விலாசம்:—

என். வி. கோபால் மெடிகல் ஆல்,
37. திருப்பள்ளி தெரு, சௌக்கார்பேட்டை, மதராஸ்.

## அற்புதம்! ஆச்சரியம்!! ஆனந்தம்!!!

## லண்டன் காமிரா.




இக்காமிரா ஆங்கிலேயர்களால் தயார் செய்யப்பட்டு தருவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ரூபாய் 50 அல்லது 100 விலை மதிப்புள்ள காமிராவில் எவ்விதம் போட்டோ படங்கள் எடுக்கிறார்களோ அவ்விதமே இக்காமிராவிலும் போட்டோபடங்கள் எடுக்க வெகு சுலபமாய் கற்றுக்கொண்டு மாதம் ரூபாய் 100 முதல் ரூ 500 வரையில் சம்பாதிக்கலாம். காமிராவுடன் (1) டிரைபிளேட், (2) பி. ஓ. பி. பேப்பர் (3) டெவலப்பர் (4) கெமிகல் இவைகள் எல்லாம் சேர்த்து விலை ரூபாய் 2-4-0. ஒரே தடவையில் 3 காமிரா தருவிப்பவர்களுக்கு 1 இங்கிலாந்து பவுண்டன் பேனாவும் போஸ்டல் சார்ஜ் உள்பட இனாமாக அனுப்பப்படும். விலாசம்:—

ஏ. ராஜம் அண்டுகோ போட்டோகிராபர், நெம்பர் 37 திருப்பள்ளித்தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection